விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி


பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 29 வெள்ளிக்கிழமை (13.03.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 084




# இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு அதிகாரப் பகிர்வு வழங்க வேண்டும்

## வாஷிங்டனில் மேனன் வலியுறுத்தல்



(வாஷிங்டன்)

இலங்கையில் நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் இன மோதல்களை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் தமிழ்ச் சமூகத்திற்கு உண்மையான அதிகாரங்கள் பகிரப்படவேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் சிவ்சங்கர் மேனன் வாஷிங்டனில் தெரிவித்துள்ளார். அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள அவர் அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)



புதுமாத்தளன் பகுதியில் வெள்ளத்தில் மூழ்கியுள்ள தற்காலிக குடியிருப்புகள்.

## விமான உதிரிப்பாகங்கள் படையினரால் மீட்பாம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு வடக்கே அம்பலவன் பொக்கணை என்ற இடத்தில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் விமானத்தின் உதிரிப்பாகங்களை படையினர் நேற்று முன்தினம் கண்டுபிடித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

# இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே இராணுவ உதவி

## மன்மோகன் சிங், வைகோவுக்கு கடிதம்

## விமான உதிரிப்பாகங்கள் படையினரால் மீட்பாம்

(கொழும்பு)

முல்லைத்தீவுக்கு வடக்கே அம்பலவன் பொக்கணை என்ற இடத்தில் நிலத்தின் கீழ் புதைத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் விமானத்தின் உதிரிப்பாகங்களை படையினர் நேற்று முன்தினம் கண்டுபிடித் துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித் துள்ளது.

எண்ணெய்ப் பீப்பாக்களில் மறைத்து நிலத் தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த உதிரிப் (12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கவே இராணுவ உதவி

## மன்மோகன் சிங், வைகோவுக்கு கடிதம்

(சேலம்)

இலங்கையில் நடக்கும் பிரச்சினை உள் நாட்டு விவகாரம். இலங்கையின் ஒருமைப் பாட்டை பாதுகாக்க இந்திய அரசு இராணுவ உதவிகளைச் செய்து வருகிறது என்று பிரத மர் மன்மோகன் சிங் கடந்த அக்டோபர் 2 ஆம் திகதி தனக்கு எழுதியி ருந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் என ம.தி. மு.க பொதுச் செயலாளர் (02ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் மனிதப் பேரழிவு ஆபத்து; ஹிலாரிக்கு 38 எம்.பிக்கள் அவசர கடிதம்

(வாஷிங்டன்)

இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கும், மனிதப் பேரழிவுக் கும் உள்ளாகும் ஆபத்து குறித்து அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ட னுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பி னர்கள் 38 பேர் கூட்டாக கடிதம் எழுதியுள்ள னர். இதேபோல ஐக்கியநாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் சூசன் றைசுக்கும் அவர் கள் கடிதம் எழுதியுள்ளனர்.

இலங்கையின் வன்னிப் பகுதியில் அப் பாவித் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் மனிதப் பேரழிவு ஆபத்து குறித்தும், அப்பகுதியில் இருந்து வெளியேறி வந்த மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு முகாம்களில் நிலவும் மோசமான நிலைமை குறித்தும் அந்த கடிதத்தில் அவர்கள் கவலை தெரிவித்துள் ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு வைத்தியசாலை கைப்பற்றப்பட்டதாக அறிவிப்பு

முல்லைத்தீவு பிரதேசத்தில் புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட் டுள்ள பாதுகாப்புப் படையினர் நேற்று காலை புதுக்குடியிருப்பு வைத்திய சாலையை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித் தார்.

புதுக்குடியிருப்பு முன்னரங்கப் பகுதிக ளில் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் களை ஆரம்பித்த (12ஆம் பக்கம் பார்க்க)

## இரசாயனத் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

முன்னேறிவரும் படையினர் மீது இரசா யனத் தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டிருந்தனர் என இராணுவ ஆய்வா ளர்கள் தெரிவித்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

உடையார்கட்டுக்குளம் வடக்குப் பிரதேசத் தில் இராணுவத்தின் 57-வது படையணியி னர் கடந்த 05ஆம் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய 10 கட்சிகள் இணைந்து மூன்றாவது அணி உருவாக்கம்

இந்திய இடதுசாரி கட்சிகள் உட்பட பத்து கட்சிகள் இணைந்து தேசிய அளவில் மூன் றாவது அணியை உருவாக்கியுள்ளன.

அந்த அணியின் விழா கர்நாடக மாநிலம் பெங்களூரை அடுத்துள்ள தும்கூரில் நேற்று நடைபெற்றது.

மதச் சார்பற்ற ஜனதா தள தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவகௌடா ஏற் பாட்டின் பேரில் நடந்த இந்த விழாவில் மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொது செயலாளர் பிரகாஷ் காரத், இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலா ளர் ஏ.பி.பரதன், (12ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்காக தற்கொலை முயற்சி

ஈழத்தில் அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தி வரும் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக் கோரி யும் அப்பாவித்தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் சென்னை யில் மாணவன் ஒருவர் தமிழ்நாடு அரசு தலைமை மருத்துவமனை கட்டடத்தில் இருந்து குதித்து தற்கொலை செய்ய முயற் சித்தது பெரும் (12ஆம் பக்கம் பார்க்க)

சிறுவர்களை மீட்போம்
சிறுவர் ஆட்சேர்ப்பை நிறுத்து

போருக்கு சிறுவர்களை ஆட்சேர்ப்பது இலங்கை மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது. இந்தப் பிரச்சினையில் இலங்கை அரசாங்கம் பூரண எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

புனர்வாழ்வு ஆணையாளர்
தலைமையதிபதி செயலகம்
unicef

## வன்னி மக்களை பாதுகாக்க போர் நிறுத்தம் அவசியம்


### ஐரோ. நாடாளுமன்றில் வலியுறுத்தல்

வன்னி மோதல்களின் கோரப்பிடியில் சிக்கி பெரும் துயரங்களை எதிர்நோக்கி வரும் பொதுமக்களை பாதுகாக்க இலங்கையின் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் போர் நிறுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றம் வலியுறுத்தியுள்ளது.

வவுனியா மற்றும் ஏனைய பிரதேசங் களில் அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்கள் மக்கள் தங்கியிருக்க பொருத்தமானதாக இல் லை என (12ஆம் பக்கம் பார்க்க)

இன்று முதல்
வாடிக்கையாளர்களின்
நலன் கருதி
4R-10 /= மட்டுமே
மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்
௬௨/௧௭, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2197)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வன்னியில் எறிகணைத்தாக்குதலால் காயமடைந்த மக்கள் புது மாத்தளன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையும் வைத்திய சாலைக்கு அழைத்து வரப்படுவதையும் படங்களில் காணலாம்

# ஈழத்தமிழர்களுக்கு உணவு ஏற்றிக் கொண்டு பிரி.யில் இருந்து 'வணங்கா மண்' கப்பல் பயணம்

ஈழத் தமிழர்களுக்காக உணவு மற்றும் மருந்துகளுடன் 'வணங்கா மண்' என்னும் கப்பல் இலங்கை நோக்கிய பயணத்தை தொடங்கவுள்ளதாக பிரித்தானியா வாழ் புலம் பெயர்ந்த உறவுகளால் உருவாக்கப் பட்டுள்ள வணங்கா மண் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

உலகமே கைவிட்ட எம் உறவுகளின் உயிர் காப்பதற்கான தாயகம் நோக்கிய பயணம் என இந்நடவடிக்கையை சிறப்பித்துக் கூறும் வணங்கா மண் ஒருங்கிணைப்புக் குழு மேலும் தெரிவித்துள்ளதாவது;

தமிழின சுத்திகரிப்பு நடவடிக்கையில் என்றுமில்லாதவாறு உணவு ஆயுதமாக பாவிக்கப்படுகின்றது.

இதற்கு ஐக்கிய நாடுகள் சபை முதல் உலக நாடுகள் அனைத்துமே எமது மக்களை தீண்டத்தகாதவர்களாக பார்க்கின்றது.

இந்நிலையில் எமது உறவுகளுக்காக பிரித்தானிய தமிழர்களால் வணங்கா மண் நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் பிரித்தானியாவில் பல்வேறு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் குண்டு மழையில் சாவுக்குள் வாழ்வாய் வாழும் மக்களை பட்டினியால் சாவு கொள்ள விடுவோமா? வேதனைகள் சோதனைகளைக் கடந்து வந்து புலம் பெயர்ந்து வாழும் நாம் எமது இனம் அழிய விடுவோமா?

அரசுகள் கைவிட்டால் என்ன? மனித நேயம் கொண்ட மக்களிடம் எடுத்து எமது துயரை சொல்வோம்.

அவர்கள் ஆதரவை பெற்றுக் கொள்வோம். எம் உறவுகளை காத்திடுவோம் தாயகம் நோக்கிய பயணத்திற்கு அனைவரும் ஒன்றிணைவோம் என்று வேண்டி நிற்கிறது என வணங்கா மண் ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது. (ச-5)

## கப்பம் பெற முயன்ற இருவர் இராணுவத்தினரால் கைது

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் பெயரைப் பயன் படுத்தி கப்பம் பெற முயன்ற இருவர் கைது செய்யப் பட்டுள்ளதாக இராணுவத்தின் 51ஆவது படைப்பிரிவு தெரிவித்துள்ளது.

மானிப்பாய் சென்.அன்ரனிஸ் தேவாலயப் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சுழிபுரம் கிழக்கிலுள்ள நபர் ஒருவரிடம் ஊரெழு இராணுவ முகாமிலிருந்து கதைப்பதாகத் தெரிவித்து 15 இலட்சம் ரூபாய் கப்பம் பெற முயன்ற இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த எஸ்.பகீதரன்,எஸ்.ரஜிதாஸ் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் கப்பப் பணத்தை பெறச் சென்றபோது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மானிப்பாய் பொலிஸில் ஒப்படைத்ததாக அச்செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்தேவி புகையிரத சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

கொழும்பில் இருந்து வவுனியா வரை நடைபெற்ற யாழ்தேவி புகையிரத சேவை நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மட்டுப் படுத்தியுள்ளதாக புகையிரத சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.சேவை திடீர் என மட்டுப்படுத்தப்பட்டமைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

மாத்தறை அக்குரச கொடாப்பிட்டியவில் நடை பெற்ற குண்டுத் தாக்குதலின் பின்னரே சேவை மட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம் என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இருந்து வடபகுதிக்கு அதாவது யாழ்ப்பாணத்திற்கு யாழ்-கண்டி ஏ-9 வீதியூடாக வெகு விரைவில் போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படும் என அரசாங்கம் பரப்புரைகள் மேற்கொண்டு வந்த நிலையில் வவுனியாவுக்கான புகையிரத சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இரத்த தானம்

(வட்டுக்கோட்டை)

யா/வட்டு இந்து நவோதயாக் கல்லூரியில் இரத்த தானம் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்யவுள்ளனர். (ச-14,30)

## கடத்தப்பட்ட பேராசிரியர் விடுவிக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்ட ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறைப் பேராசிரியர் தம்பிக்க கங்காநாத் திசாநாயக்க விடுக்கப்பட்டுள்ளார்.

கடத்திச் சென்றவர்கள் தன்னை கிரிந்தி வெல பிரதேசத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விட்டுச் சென்றதாக கங்காநாத் திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

போராசிரியர் நேற்றுமுன்தினம் 8 மணியளவில் மத்தேகொடவில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டார்.

பொலிஸார் என கூறிய ஆயுதம் தாங்கிய சிலரால் இவர் கடத்திச் செல்லப்பட்டதாகவும் இவர்களில் சிலர் தமது தலைமுடியை நீளமாக வளர்த்திருந்ததாகவும்கங்காநாத் திசாநாயக்காவின் வீட்டுப்பணியாளர் தெரிவித்துள்ளார். இதேவேளை தனது ஆதரவாளர்கள் சிலரே தன்னைக்கடத்திச் சென்றதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ச-5)

## இந்திய வைத்தியர்களின் பணி இன்று ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் உள்ள புல்மோட்டையில் இந்திய இராணுவ மருத்துவக் குழுவினர் இன்று தற்காலிக மருத்துவ மனையை அமைக்கின்றனர்.

கடந்த திங்களன்று கொழும்பு வந்த 52 பேர் அடங்கிய இந்திய மருத்துவக் குழுவினர் நேற்று முன்தினம் அங்கிருந்து புல்மோட்டைக்கு சென்றனர்.அங்கு போர் நடக்கும் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு மருத்துவ உதவிகளை அளிப்பர்.

இந்திய மருத்துவக் குழுவினர் புல்மோட்டைக்குப் புறப்படும் முன், அவர்களை சுகாதாரம் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா சந்தித்துப் பேசினார்.

அப்போது சிக்கலான இந்த கால கட்டத்தில் உதவும் இந்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.இந்த உதவி மூலம் இந்தியா-இலங்கை இடையே நெருங்கிய நட்புறவு உள்ளது வெளியாகியுள்ளது என்றார்.இதன் போது இலங்கைக்கு இந்திய அரசால் வழங்கப்பட்ட மருத்துவப் பொருட்களையும் அமைச்சரிடம் இல்ங்கைக்கான இந்திய துணைத் தூதுவர் அலோக் பிரசாத் ஒப்படைத்தார். (ச-5)

## சண்டிலிப்பாயில் நிவாரண விநியோகம்

'நிஷா' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு இன்று கியூமெடிக்காவினால் நிவாரணம் வழங்கப்படவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக சங்கரப்பிள்ளைவீதி மானிப்பாயில் அமைந் துள்ள கியூமெடிக்கா அலுவலகத்தில் இந் நிவா ரண விநியோகம் இடம் பெறும் எனகியூமெடிக்காவின் இயக்குநர் வண.பிதா சாம் இராஜசூரி யர் தெரிவித்துள்ளார். (ச-14)

## புதுமாத்தளனில் தற்காலிக குடில்கள் புயல் காற்றால் பெரும் சேதம்

முல்லைத்தீவில் அண்மையில் வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையால் புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் உள்ள 50 ஆயிரத்திற்கும் அதிகமான இடம் பெயர்ந்த பொது மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம் பெயர்ந்து வந்த மக்களில் அநேகமானோர் புதுமாத்தளன் பகுதியில் தற்காலிக குடில்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தற்காலிக குடில்களும் புயல் காற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இம் மாதம் 9,10 ம் திகதிகளில் வீசிய பலத்த காற்றுடன் கூடிய மழையால் இடம் பெயர்ந்து புது மாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் தற்காலிக குடில்களில் வாழும் மக்களை பெரிதும் பாதித்திருப்பதாகவும் வேறிடம் செல்ல வழியில்லாது இவர்கள் கஷ்டப்படுவதாகவும் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்கள் போதிய உணவு, மருந்து, சுத்தமான குடிநீர் இன்றி வாழ்வதாகவும் அத்துடன் தற்காலிக மலசல கூடமும் சேதமடைந்துள்ளதால் இவர்கள் பெரும் அவலத்திற்குள் உள்ளாகியிருப்பதாகவும் டாக்டர் சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.

எனவே உடனடியாக பாதிக்கப்பட்டுள்ள இம்மக்களுக்கு 50 ஆயிரம் தற்காலிக குடில்கள் தேவைப்படுவதுடன் தற்காலிக மலசல கூடமும் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ரி. சத்திய மூர்த்தி தமது அறிக்கை ஒன்றில் மேலும் தெரிவித்தார். (ச-5)

## இலங்கையின்...

வைகோ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இராணுவ உதவிகள் மட்டுமன்றி, பண உதவிகளையும் இந்திய அரசு செய்து வருகின்றது என்றும் அவர் எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

சேலத்தில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ம.தி.மு.க் பொதுச் செயலாளர் வைகோ நேற்று சேலம் சென்றிருந்தார். அப்போது செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கூறியதாவது,

போர் நடப்பதால் எந்த வித அடிப்படை வசதியும் இல்லாமல் அங்கு தமிழர்கள் சாகின்றனர்.தமிழ் இனத்தை பூண்டோடு அழிக்கும் வேலையில் அரசு இறங்கியுள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் மருத்துவமனைகள் மீது குண்டுகள் வீசக் கூடாது என்றும் கூறியுள்ளன. ஆனால் இந்திய அரசு இது வரை ஏன் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தவில்லை.

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதற்கு இந்தியா தான் காரணம். இலங்கைக்கு இந்தியா ஆயுத உதவிகள் செய்து வருகின்றது. ஆயுதம் கொடுக்கவில்லை எந்தவித உதவியும் செய்யவில்லை என தங்கபாலு எம்.பி கூறியுள்ளார்.

ஆனால் பிரதமர் மன்மோகன் சிங் கடந்த அக்டோபர் 2 ஆம் திகதி எனக்கு எழுதியிருந்த கடிதத்தில், இலங்கையில் நடக்கும் பிரச்சினை உள்நாட்டு விவகாரம். இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காக்க இந்திய அரசு இராணுவ உதவி செய்கின்றது என்று குறிப்பிட்டுள்ளார். இராணுவ உதவிகள் மட்டுமன்றி பண உதவியும் செய்து வருகின்றது என்று கடிதம் மூலம் தெரிவித்திருக்கிறார் என்றார். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## மதியத் தூக்கம்

என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார். மதியம் சாப்பிட்டு முடிந்ததும் சிறிது நேரம் தூங்கிவிடுவார். அதன் பின்னர் சுறுசுறுப்பாக வேலை செய்வார்.

பொதுவாக எல்லோருக்கும் மதியம் சாப்பிட்டதும் கொஞ்சம் கீழே சாய்ந்தால் சௌகரியமாக இருக்கும். இது இயற்கை தான்.

அறிவியல் ஆய்வுகள் என்ன சொல்கிறது தெரியுமா? இரவுத்தூக்கத்தின் நடுப்பகுதியிலிருந்து 12 மணிநேரம் கழித்து உடம்பு அதிகமாக சோர்வடைகிறது. அந்த நேரம் உறக்கம் வருகிறது.

ஒரு பதினைந்து நிமிடம் தூக்கம் கிடைத்தால் உடம்பு மறுபடியும் இலேசாக ஆகிவிடும். கடுமையான உழைப்புக்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளும். நீண்ட தூக்கங்களை விட இதுமாதிரியான குட்டித் தூக்கங்களுக்கு மதிப்பு அதிகம். இதை "நேப்" என்று சொல்வது வழக்கம்.

நெப்போலியன் குதிரைச் சவாரியில் இருக்கும் போதே தூங்குவது வழக்கம். அதனால் தான் அந்தப் பெயர் வந்தது என்று சிலர் சொல்கிறார்கள்.

ஆனால் உண்மையான காரணம் அதுவல்ல. Knappian என்பது ஒரு பழைய ஆங்கில வார்த்தை. அதிலிருந்து வந்தது தான் நேப் – என்று சொல்கிறார்கள்.

மிகப் பெரிய பொறுப்பில் இருந்தவர்களெல்லாம் மதியம் தூங்குவது உண்டாம். வின்ஸ்டன் சேர்ச்சில் மதியம் மூன்று மணிக்கு தூங்க ஆரம்பித்தால் ஆறு மணிக்குத்தான் விழிப்பாராம்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த பொழுது ஜெர்மனியர்கள் லண்டனில் குண்டு போட்டார்கள். அப்பொழுது சில சமயங்களில் இவரது தூக்கம் கலைந்ததாம்.

உயிரியல் வல்லுநர்கள் மிருகக்காட்சிசாலையில் உள்ள மனிதக் குரங்குகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார்கள். அவையெல்லாம் மத்தியான நேரத்தில் தூங்குமாம். விடியற் காலையில் புத்துணர்ச்சியுடன் இருக்குமாம். பரிணாம கொள்கையின்படி இது மனிதர்களுக்கு தொடர்ந்து வந்திருக்கிறது.

தூங்கி எழுந்தவுடன் இசையைக் கேட்பதோ அல்லது புத்தகம் வாசிப்பதோ நல்லதில்லையாம். அது மேலும் தூக்கத்தைக் கிளறுமாம். சாப்பிட்டவுடன் அப்படியே தூங்குவதை விட மூன்று குவளை தண்ணீர் குடித்துவிட்டு தூங்கினால் நல்லதாம். சமிபாடு சுலபமாக இருக்குமாம்.

சியஸ்டா என்று சொல்லப்படும் இந்த மதிய தூக்கம் இயற்கைக்குப் புறம்பானதல்ல. இது நல்லதுக்குத் தான் என்று அது சம்பந்தமான நிபுணர்களெல்லாம் சொல்கிறார்கள்.

மதியத்தூக்கம் மாதிரியே பயணத்தூக்கமும். சிலர் பேருந்தில் உட்கார்ந்த உடனே தூங்க ஆரம்பித்து விடுவார்கள்.

ஒருவர் டாக்டரைத் தேடி வந்தார்.

"ஏன் டாக்டர்? பஸ்ஸில் உட்கார்ந்து போகும் போது தூங்குவது தப்பா?" என்று கேட்டார்.

"அது ஒன்றும் தப்பில்லையே!" என்றார் டாக்டர்.

"அதற்கு ஏன் என்னை வேலையை விட்டு நீக்கி விட்டார்கள்?" என்றார் அவர்.

"நீங்கள் என்ன வேலை பார்க்கிறீர்கள்?" என்றார் டாக்டர்.

"பஸ்ஸில் டிரைவர் உத்தியோகம் பார்க்கிறேன்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் தொழில்நுட்ப பாட நெறிகள் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஆணைக்குழுவின் சிபார்சுகளுக்கு அமைவாக தேசிய கல்வி நிறுவகம் இரண்டாம் நிலைப் பாடசாலைகளில் தொழில்நுட்ப பாட நெறிகளை 2009 ஆம் ஆண்டில் இருந்து அமுல்படுத்தியுள்ளது.

இப்பாடநெறி வன்தொழில் நுட்பம், மென் தொழில் நுட்பம் என இரண்டு பிரதான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது. வன்தொழில் நுட்பப் பிரிவானது தரம் 12 இற்கான ஒரு பொதுவான கட்டாய உள்மைய பாடத்தையும் தரம் 13 இற்கான விசேட விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

வன்தொழில்நுட்பத்தைத் தெரிவு செய்யும் மாணவர்கள் தரம் 12 இல் உள்ள கட்டாய வன் தொழில் நுட்ப உள்மையப் பாடத்திட்டத்தையும் தரம் 13 இலுள்ள மூன்று விசேட வன் தொழில்நுட்ப விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களில் ஒன்றையும் கற்க வேண்டி ஏற்படும்.

மூன்று விசேட வன் தொழில் நுட்ப விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களாக பொறிமுறைத் தொழில் நுட்பம், குடிசார், தொழில்நுட்பம், மின்சார, மின்னனு மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகியன உள்ளடக்கப்படுகின்றன.

மென் தொழில் நுட்ப பிரிவில் தரம் 12 இற்கான ஒரு பொதுவான கட்டாய உள்மைய பாடத்தீட்டத்தையும் தரம் 13 இற்கான மூன்று விசேட விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது.

மென் தொழில்நுட்பப் பாடத்தை தெரிவு செய்யும் மாணவர்கள் தரம் 12 இல் உள்ள கட்டாய உள்மைய பாடத்திட்டத்தையும் மூன்று விசேட மென் தொழில் நுட்ப விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களில் ஒன்றை கற்க வேண்டி ஏற்படும்.

மூன்று விசேட மென் தொழில் நுட்ப விருப்பத்திற்குரிய பாடத்திட்டங்களில் விவசாய தொழில்நுட்பம், உயிர் மூலவள தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம் ஆகிய பாட நெறிகள் உள்ளடக்கப்படுகின்றன.

கலைப்பிரிவு மாணவர்கள் தமது வழமையான இரண்டு கலைப்பிரிவுப் பாடங்களுடன் மேற்கண்ட இரண்டு தொழில்நுட்பத் துறைகளில் ஒன்றில் ஏதாவது ஒரு பாடத்தை தெரிவு செய்து கொள்ளலாம்.

மாணவர்களுக்கு பல்கலைக் கழகம் புகுவதற்கான வாய்ப்புக்கள் தவறுமிடத்து அவர்களுக்கு வாழ்க்கைத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையங்களிலோ அன்றி தொழில் நுட்பக் கல்லூரிகளிலோ சேர்ந்து தமது கல்வியை தொடர்வதற்கு இதனால் வாய்ப்பு ஏற்படுகின்றது.

இப்பாடத்திட்டம் பற்றிய சுற்று நிருபம் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-7)

# அமைச்சின் அனுமதியுடன் வடக்கில் மூன்று தொழில் நுட்ப கல்லூரிகள்

(கொழும்பு)

வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி அமைச்சர் கலாநிதிபியசேன கமகேயின்தொழில் நுட்பக்கல்வி கற்ற இளைஞர்கள் அனைவருக்கும் தொழில்நுட்பக் கல்வி பட்டம் என்ற சிந்தனையின் அடிப்படைக்கு ஏற்ப, தொழில் நுட்பக் கல்லூரி அதிபரும் பணிப்பாளருமான ந.யோக ராஜனின் வேண்டுகோளுக்கிணங்க பணிப்பாளர் நாயகம் கலாநிதி எச்.எல். ஒபயசேகராவினால் கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரி, மன்னார் தொழில் நுட்பக்கல்லூரி, முல்லைத்தீவு தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய மூன்று புதிய தொழில் நுட்பக்கல்லூரிகள் அமைப்பதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வவுனியாவில் தங்கியுள்ள மாணவர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள முகாம்களில் தொழில் பயிற்சி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்படும்போது அவர்களின் சொந்த இடங்களில் மீண்டும் தண்ணீர் இணைப்பு வசதி, கட்டட நிர்மான வசதிகளை ஏற்படுத்தும் முகமாக அவர்களுக்கான தொழில் நுட்பப் பயிற்சி வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்களினால் முகாம்களில் வைத்து தற்போது வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இவற்றிற்கான உடனடி உத்தரவுகளை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வழங்கியுள்ளார். இடம் பெயர்ந்து வவுனியா சென்றுள்ள மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியேற்றப்படும் போது உடனடியாக கிளிநொச்சி தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு ஆரம்ப நடவடிக் கைகள் மேற்கொள்ளும் வண்ணம் யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ந. யோகராஜனுக்கு பணிப்பாளர் நாயகம் பணித்துள்ளார்.

தொடர் நடவடிக்கையாக வெளிநாட்டு உதவியுடன் புதிய தொழில் நுட்பக்கல்லூரி கட்டுவதற்கான ஏற்பாடுகள் பணிப்பாளர் நாயகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த வன்னி மாணவர்கள் தொழில் நுட்பக் கல்விப் பயிற்சிகளை பயிலுவதற்கான வாய்ப்பு சாதகமாக அமைந்து வருவதனால் இச் சந்தர்ப்பத்தை உடனடியாக பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் இதற்கான பொருத்தமான காலச் சூழலும் அதற்கான அமைதியும் கிடைக்கும் பட்சத்தில் உடனடியாக வேலைத்திட்டத்தை ஆரப்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ள இருப்பதாக பணிப்பாளர் ந. யோகராஜன் தெரிவித்துள்ளார்.

(ஓ-7)

# இராசி பலன்

13.03.2009
(மாசி 29, வெள்ளிக்கிழமை)
துதியை முற்பகல் 7.03 மணிவரை
அத்தம் முற்பகல் 8.19 மணிவரை
இராகுகாலம் 10.51-12.21 மணிவரை
சுபநேரம்6.21-7.51 மணிவரை
சுபமுகூர்த்த தினம்

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் விருத்தி, நோய் குணமடைதல், தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை. |
| இடபம் | வியாபார விருத்தி, புத்திரரால் கவலை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| மிதுனம் | மனச் சஞ்சலம், ரோகநிலை, தொழில் சிந்தை, முயற்சி தாமதம். |
| கடகம் | தெய்வ தரிசனம், கூட்டுமுயற்சி, வாக்கு மேன்மை, தனலாபம். |
| சிங்கம் | வேலைச்சுமை, குறைகேட்டல், முயற்சி தாமதம், பணவிரயம். |
| கன்னி | தெய்வதரிசனம், நண்பர்கள் உதவி, ஜனவசியம், அதிக பிரயாசை. |
| துலாம் | இடமாற்றம், உணர்ச்சி வசப்படல், பணவிரயம், வேலைச் சுமை. |
| விருச்சிகம் | கலந்துரையாடல், தெய்வதரிசனம், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| தனுசு | தூரதேசச் செய்தி, செய்தொழில் விருத்தி, பாராட்டு, பிறர் உதவி. |
| மகரம் | அச்சமான நிலை, திடீர் பயணம், புதிய முயற்சி, ஆன்றோர் சந்திப்பு. |
| கும்பம் | தெய்வ சிந்தை, காரிய தடங்கல், போசன சுகம், மனஸ்தாபம். |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, தனலாபம், தெய்வ தரிசனம், காரிய நன்மை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 70-100 | 80-110 |
| பச்சைமிளகாய் | 50 | 70 |
| தக்காளி | 50 | 60 |
| அவரை | 20 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 |
| கோவா | 20 | 30 |
| கரட் | 50 | 60 |
| பூசணி | 20 | 30 |
| புடோல் | 10 | 20 |
| வாழைக்காய் | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 35 | 30-35 |
| பெரிய வெங்காயம் | 40 | 50-60 |
| பாகற்காய் | 20 | 30 |
| வெண்டிக்காய் | 20 | 40 |
| கரணைக் கிழங்கு | 20 | 30 |
| பயிற்றங்காய் | 25 | 40 |
| லீக்ஸ் | 100 | 110 |
| போஞ்சி | 25 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 |
| தேசிக்காய் | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 30-35 | 35-40 |

## கோட்ட மட்ட போட்டிகளில் சண்டிலிப்பாய் இந்துவின் சாதனை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற பெரு விளையாட்டுக்களில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பல முதன்மை வெற்றிகளைப் பெற்றுள்ளது.

ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் 15,19 வயது அணிகள் கோட்ட மட்ட சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டன.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகளில் 15வயது அணி முதலாமிடத்தையும் 17,19 வயது அணிகள் மூன்றாமிடத்தையும் பெற்றன.

வலைப்பந்தாட்டப் போட்டிகளில் 17,19 வயது அணிகள் முதலாமிடம் பெற்று சம்பியன்களாயின. 15 வயது அணி இரண்டாம் இடத்தைப் பெற்றது.

இவ்வணிகள் வலய மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளும் தகுதியையும் பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் வி.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ)

## ஹொக்கி சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் 11 பேர் பங்குபற்றும் ஹொக்கி சுற்றுப் போட்டி இம் மாத இறுதி வாரத்தில் நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்றவுள்ள கழகங்கள் விண்ணப்பப்படிவத்தை சங்க செயலாளரிடம் பெற்று இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

இதேவேளை இச் சுற்றுப் போட்டிக்கான அணி ஒழுங்குத் தெரிவு 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.மாவட்ட ஹொக்கி சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)




## உள்ளூராட்சி ஆணையாளர் குழுவினர் யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அடங்கிய குழுவினர் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் தலைமையிலான மூவர் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன்தினம் விமானம் மூலம் வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் யாழ்.குடாவில் உள்ள அனைத்து உள்ளூராட்சி அலுவலகங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு அபிவிருத்தி தொடர்பான விசேட கலந்துரையாடலை மேற்கொண்டு வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பது தொடர்பான முடிவுகளை எடுக்கவுள்ளனர். (ஓ-5)

# நயினாதீவு துறைமுகம், வீதி புனரமைப்பு வேலைகள் ஆரம்பம்

பல வருடங்களாகத் சேதமடைந்த நிலையிலுள்ள நயினாதீவுத் துறைமுகம் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திலிருந்து வங்களாவடித்துறை வரையான பிரதான வீதியும் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவிருக்கின்றன.

மிக மோசமான நிலையிலுள்ள துறைமுகத்தையும் வீதியையும் அபிவிருத்தி செய்து தரும்படி நயினாதீவு கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைக் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவிருகின்றன.

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாமலிருந்த துறைமுகப் பகுதி 18 மில்லியன் ரூபா செலவிலும் வங்களாவடி வீதி 23 இலட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவிருக்கின்றன. (ஓ-5)

## மீட்டல் விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் 2008/2009 ஆம் ஆண்டு பட்டமேற் கல்வி டிப்ளோமா கற்கைநெறியினை மேற்கொண்ட மாணவர்களுக்கான மீட்டல் விரிவுரைகள் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என கற்கைநெறி இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"மனத்திரை மேகங்கள்" கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து நெடுந்தீவு முகிலனின் 'ஃ' கவிதைத் தொகுதி எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது. (ஓ-2)

## கடும் மழையையடுத்து விவசாய செய்கைகள் பாதிப்பு

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் வெங்காய், புகையிலைச் செய்கைகள் தற்போது பெய்துவரும் கடும் மழையை அடுத்து பாதிப்படைந்துள்ளது. பெரும்பாலான தோட்டங்களில் வெங்காயம் மற்றும் புகையிலைப் பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் இச் செய்கையாளர்களுக்கு பெருமளவு நட்டம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஓ-10)

## அவசர சிகிச்சை பயிற்சி வகுப்பு

(மருதங்கேணி)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் அவசர சிகிச்சை பயிற்சி வகுப்பொன்று 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 5 நாட்களுக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை சுகாதார வைத்தியசாலையைச் சேர்ந்த 10 தாதி உத்தியோகத்தர்களும் 10 பரிசாரகரும், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த 10 தாதியர்களும், பரிசாரகரும் கலந்துகொள்ளவுள்ளனர். மொத்தம் 30 ஊழியர்கள் இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-35)

## சேவைநலன் பாராட்டு விழா



நீர்வேலிக் கிராமிய வங்கியின் முகாமையாளராக இருந்து பணி ஓய்வுபெற்ற ச.க. முருகையாவின் சமய, சமூகப் பணிகளைப் பாராட்டி நடாத்தப்படும் சேவைநலன் பாராட்டு விழாவும் 'திருப்பணிச் செம்மல்' விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நீர்வைமணி கு.தியாகராஜக் குருக்கள் தலைமையில் நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவில் வீதியில் உள்ள ஸ்ரீ கணேச முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க. ஆனந்தராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஓ)

## வடமராட்சி கிழக்கில் வீதிகள் திருத்தம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாத நான்கு வீதிகள் யாழ்.அரச அதிபர் க.கணேஷின் பணிப்புரைக்கமைய யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அனுசரணையுடன் திருத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் கற்கோவளம் புனித நகர் இணைப்பு வீதி, விராத்துப்பளை புனித நகர் இணைப்பு வீதி, கற்கோவளம் கடற்கரை வீதி, ஆனைவிழுந்தான் புனிதநகர் வீதி ஆகியன திருத்தப்படவுள்ளன. (ஓ-10)

## கொக்குவில் மீன் சந்தையை புனரமைக்க நடவடிக்கை

கொக்குவில் மீன் சந்தையில் மாலை நேர வியாபாரம் அதிகரித்து வருவதனால் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.ஜே.சாந்தசீலனிடம் வினவிய போது, கொக்குவில் சந்தையில் அரை குறையாகவுள்ள கட்டடங்களை பூர்த்தி செய்வதற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதாகவும் நிதி கிடைத்ததும் கட்டடங்கள் பூர்த்தியாக்கப்பட்டு மீனவர்களுக்கான பதனிடல், பாதுகாத்தல் போன்றவற்றுக்கான சகல வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (ஓ-36)

## புதிய அதிபர் நியமனம்

(வடமராட்சி)

கரவெட்டி வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக மா. நவநீதமணி கடந்த 9 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அதிபர் ம. குட்டித்தம்பி ஓய்வு பெற்றதையடுத்து இவர் நியமனம் செய்யப்பட்டார். குடத்தனை அ.த.க. பாடசாலை அதிபராக இருந்த இவர், தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ-10)

## தேர்வுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆங்கில தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளுக்கு பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சை எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் யாழ்.மத்திய கல்லூரியிலும் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் ஆன்மீகத் தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு "பெரிய புராணம் காட்டும் சைவ நெறி" எனும் விடயம் பற்றி புதிய உயர் கலைக் கல்லூரி ஆசிரியர் திருமதி அருள் நங்கை சண்முகநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

❖❖❖



(மருதங்கேணி)

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 10 மணி பூசை முடிவுற்றதும் "அறம் வெல்லும் பாவம் தோற்கும்" என்னும் தொடரில் குடத்தனை அ.த.க.பாடசாலை ஆசிரியர் சைவப் புலவர் திருமாறன் ஐயர் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஓ-35)

## வடமராட்சியில் திருடர் தொல்லை

(வடமராட்சி)

வடமராட்சியில் திருடர்களின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்து வருவதனால் மக்கள் மத்தியில் பீதி நிலை காணப்படுகின்றது. திருடர்கள் இரவில் கடைகளை உடைத்து பொருட்களைத் திருடுவதும், வாழைத் தோட்டங்களுக்குள் நுழைந்து கப்பல் வாழைக் குலைகளை திருடுவதும், வீடுகளுக்குள் புகுந்து மக்களைத் தாக்குவதும், கோழிகளைத் திருடுவதுமாகவுள்ளனர். இதனைத் தடுப்பதற்கு படையினர் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஓ-10)



பருத்தித்துறை சென்தோமஸ் றோமன் கத்தோலிக்க மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.வின்சென்ற் டீபோல் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், வித்தியாலய அதிபர் அருட்செல்வி ஜெயநாயகவதி செபமாலை தலைமை உரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினரான வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, அருட்திரு எஸ்.டேமியன் அடிகளார் ஆகியோர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் வெற்றி வீராங்கனைகளுக்குப் பரிசில்களை வழங்குவதையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-பருத்தித்துறை நிருபர்)

# இலங்கையில் தமிழர் 94

### ஹெள மக்களும் தமிழ் மக்களும் பொ.ஆ.300–900

பல்லவர் செல்வாக்கு மிகுந்து காணப்பட்ட பிரதேசமாக இருப்பது வடகிழக்குக் கரையோரமாகும். இக் கரையோரத்தில் வடக்கில் திரியாய் தொடக்கம் தெற்கில் குச்சவெளி வரையும், உள்நாட்டில் பதவியா மற்றும் கந்தளாய் ஆகிய இடங்கள் வரையும் பரந்துள்ள பிரதேசம் பல்லவர் செல்வாக்கு அதிகம் பரவிய பகுதி எனலாம்.

இதற்கு அப்பாலும் பல்லவர் செல்வாக்குப் பரவியிருந்தமைக்குச் சான்றுகளாக நாலந்தாவில் உள்ள மஹா யானக் கோயிலும் (கெடிகே) அனுராதபுரத் துக்கருகே இசுரு முனியாவில் உள்ள சிற்பங் களும் உள்ளன. திரியாயும் குச்சவெளியும் மஹாயான பௌத்த நிறுவனங்கள் இருந்த இடங்கள் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது.

கந்தளாயும் பதவியாயும் பிராமணிய நிறுவனங்கள் அமைந்த இடங்களாக இருந்திருக்க முடியும் என்பது பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சோழர் ஆட்சி நடத்திய போது இருந்த நிறுவனங்கள் பற்றிய சான்றுகளைக் கொண்டு கூறலாம்.

பதினோராம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்த பிரமதேயங்களுள் மிக முக்கியமான இரண்டு கந்தளாயிலும் பதவியாயிலும் இருந்தன. இவை பற்றிப் பின்னர் விரிவாகக் கூறப்படும். பதவியாவில் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் என்ற சிவன் கோயிலை மையமாகக் கொண்ட பிராமணக் குடியிருப்பு ஒன்று இருந்தது. இது எப்பொழுது நிறுவப்பட்டது என்பதைத் தொல்லியல் ஆய்வு மூலமே அறியலாம். அதேபோல, கந்தளாயில் தென் கைலாசம் (பின்னர் விஜயராஜ ஈஸ்வரம்) என்ற கோயிலை மையமாகக் கொண்ட பிராமணக் குடியிருப்பு ஒன்று இருந்தது.

இது எப்பொழுது நிறுவப்பட்டது என்பதையும் தற்பொழுது அறியச் சான்று இல்லை. இவை இரண்டாம் ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றிய பிரம தேயங்கள் என்று கொள்ள இடமுண்டு.

இவ்வாறு இலங்கையின் வடகிழக்கிலும், வேறு வட பகுதிகளிலும், பிராமணர் குடியிருப்புகளாகிய பிரமதேயங்கள் நிறுவப்பட்ட பின் சைவம் வலுப்பெறவும் தமிழ்நாட்டில் எழுந்த நாயன்மார் இயக்க்த்தின் செல்வாக்கு இலங்கையில் பரவவும் வழிகோலப்பட்டது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து நாயன்மார்கள் நடத்திய இயக்கம் படிப்படியாக வலுப்பெற்ற போது அதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது.

இலங்கையில் 600 க்கும் 900க்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய சைவம் பற்றித் தொல்லியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் மூலம் ஒரு சில சான்றுகளே இதுவரை கிடைத்துள்ளன. இவை சைவக் கோயில்கள் பற்றியவை.

இன்று சைவம் நன்கு பேணப்பட்டுள்ள இடமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த கோயில்கள் பற்றிப் பிற்பட்ட நூல்களில் உள்ள சில தகவல்களை விட நம்பகமான சான்று எதுவும் தற்போது இல்லை. இவற்றின் படி அங்கு நகுலேஸ்வரம் என்ற பழைய கோயில் ஒன்று இருந்ததாக அறிகின்றோம். வட கரையில் நகுலேஸ்வரம் அமைந்திருந்தது போல, இலங்கையைச் சுற்றி ஈஸ்வரங்கள் இருந்தன என்று மரபுக் கதைகள் இலங்கைச் சைவ மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றன. அவ்வாறு மேற்குக் கரையில் முன்னீஸ்வரம் மற்றும் திருக்கேதீஸ்வரம், கிழக்குக் கரையில் திருக்கோணேஸ்வரம் ஆகியவையும் தெற்குக் கரையில் தொண்டீஸ்வரம் என்ற கோயிலும் இருந்தன என்பது மரபுக் கதை. இவற்றுள் தொண்டீஸ்வரம் தவிர்ந்த ஏனைய மூன்று கோயில்கள் பற்றியும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தென் கரையில் நகரீசர் (நகரீஸ்வரம்) கோயில் என்றொரு தலம் இருந்ததாகப் பிற்பட்ட கல்வெட்டுச் சான்று கிடைத்துள்ளது. இக் கோயிலே தொண்டீஸ்வரம் என வழங்கியதோ தெரியவில்லை.

நாயன்மார்களுடைய இயக்கம் தொடங்கிய காலமளவில் மேலே குறிப்பிடப்பட்ட சைவத் தலங்களுள் திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் பழமை வாய்ந்த முக்கிய சைவத் தலங்களாகத் தமிழ்நாட்டிலேயே கருதப்பட்டன எனலாம். இதனால் சைவ நாயன்மார் பாடிய தேவாரங்கள் இவ்விரு தலங்களை நோக்கியும் பாடப்பட்டன.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயனாராகிய திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டில் பல பழைய சைவத் தலங்களுக்குச் சென்று அவற்றின் சிறப்பைத் தேவாரமாகப் பாடினார். அவர் இலங்கைக்கும் சென்றாரோ என்பது தெரியவில்லை.

ஆனால் இலங்கையின் இரு சைவத் தலங்கள் மீது தேவாரங்கள் பாடி அவற்றைச் சிறப்பித்துள்ளார். அத்தலங்கள் கோணேஸ்வரமும் கேதீஸ்வரமுமாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சுந்தரமூர்த்தி நாயனாரும் கேதீஸ்வரத்தின் மீது தேவாரம் பாடியுள்ளார்.

எட்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் மாணிக்கவாசகர் இலங்கையுடன் தொடர்புடைய ஒரு சைவத் தலைவராக விளங்கினார் எனக் கருத இடமுண்டு. இவர் இலங்கைத் தலங்கள் பற்றிப் பாடல்கள் பாடாவிட்டாலும் இலங்கையுடன் தொடர்பு கொண்ட ஒருவராகச் சில கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளார்.

சைவ மரபுகளின் படி மாணிக்கவாசகர் மதுரையில் பாண்டிய மன்னனின் அமைச்சராகக் கடமையாற்றியபோது மன்னனுக்குக் குதிரைகள் வாங்குவதற்காகப் பெருந்துறை என்னும் துறைக்குச் சென்று வந்தார் என அறியக் கிடக்கின்றது.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

இவருடைய பிரசித்தி பெற்ற திருவாசகத்தில் பலமுறை 'திருப்பெருந்துறையுறை சிவன்' பற்றிப் பாடியுள்ளார். பெருந்துறை என்பதும் 'மாதோட்டம்' என்பதும் ஒரு பொருள் பெயர்கள்.

மாதோட்டம் குதிரை வர்த்தகத்துக்கும் வேறு தூர வர்த்தகத்துக்கும் நெடுங்காலம் பிரசித்தி பெற்ற துறையாக விளங்கிய படியால், மாணிக்கவாசகர் குதிரை வாங்கிய துறை மாதோட்டமாக இருக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 14


தாயுடன் ஒபாமா

1959 இல் 23 வயதான ஒபாமா (சீனியர்) ஹவாய்ப் பல்கலைக்கழகத்தின் முதல் ஆபிரிக்க மாணவனாக வந்திறங்கினார்.

அங்கு அவர் எக்கணமிக்ஸ் என்ற பொருளியல் பிரிவை தேர்ந்து படித்தார். யாராலும் எட்ட முடியாதளவில் மன ஒருமைப் பாட்டுடன் தன் பட்டப்படிப்பை மூன்று வருடங் களில் முடித்து வகுப்பில் முதலாவதாகத் தேறினார்.

அவரைச் சுற்றி எப்போதும் நண்பர்கள் கூட்டம் படைபடையாகக் காணப்படுவர். கல்லூரியில் சர்வதேச மாணவர் கழகத்தை ஏற்படுத்தி அதன் முதல் தலைவராக இருந்து வழி நடத்தினார்.

அவர் ரஷ்ய மொழிப் பாட நெறி வகுப்புக்குப் போய் வரும்போது 18 வயது நிரம்பிய நாணமே உருவெடுத்தால் போன்ற ஒரு அமெரிக்க மாணவியை சந்திக்க நேர்ந்தது.

இது விரைந்து காதலாக பரிணமித்தது. காதலியின் பெற்றோர்கள் ஆரம்பத்தில் கொஞ்சம் எதிர்த்தனராயினும், ஈற்றில் அவர்கள் மாப்பிள்ளையின் வசீகரம், புத்திக் கூர்மை, ஆளுமை ஆகியவற்றால் சம்மதித்தனர். இந்த இளம் ஜோடிகள் திருமணப் பந்தத்தில் இணைந்தனர். மனைவி தாயானாள். ஆண் மகவைப் பெற்றாள். தந்தை மகனுக்கு தன் பெயரையே தன் முதிசமாக வழங்கினார்.

மகன் பிறந்த நல்ல நேரம் தந்தைக்கு மேலுமொரு புலமைப்பரிசில் கிடைத்தது. இம்முறை அவர் ஹார்வாட் பல்கலைக்கழகத்தில் டாக்டர்(Ph.D) பட்டம் பெறப் போகிறார். குடும்பத்தைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முடியாத நிலை.

புலமைப் பரிசுத் தொகை குடும்பச் செலவுக்குப் போதாது. ஆகவே குடும்பம் பிரிய வேண்டிய நிலை. தவிர்க்க முடியாது. தாயும் சேயும் தனித்து விடப்பட்டனர். தந்தை ஆபிரிக்கக் கண்டத்துக்கு தான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற தாய்நாடு திரும்பினார். ஆனாலும் அன்பின் பிணைப்பு கால தேச வர்த்தமானத்தையும் தாண்டிப் பிழைத்து நின்றது.

தந்தை தன்னைச்சுற்றி உள்ளவர்கள் போலல்லாது சுத்தக் கறுப்பாக இருந்தார் என்பதோ அல்லது தாய் பால் போல் வெள்ளையாக இருந்தார் என்றோ மகன் ஒபாமாவுக்கு இன்னும் மனதில் பதியவில்லை. தந்தை பற்றிய ஒரு கதை அடிக்கடி அவரின் காதில் வந்து விழும். அக்கதை இனப் பாகுபாட்டை நன்கு விளக்குவதாக அமைந்தது.

### ஜம்பொன்


தந்தையார் வெகு நேரமாக தன் படிப்பில் மூழ்கியிருப்பாராம். பின் தன் மாமனாரையும் அழைத்துக் கொண்டு பக்கத்தில் உள்ள பார்க்குக்குச் செல்வது வழக்கம்.

ஒரு நாள் அப்படி குடித்து உண்டு களித்து இருக்கும் போது ஒரு வெள்ளையர் எழுந்து எல்லோரும் கேட்கும்படியாக உரத்த குரலில் "என்னால் ஓர் கறுப்பருக்கு அருகிலிருந்து நல்ல மதுபானத்தைக் குடித்து சுவைக்க முடியாது" என்று சப்தமிட்டார்.

அங்கிருந்தவர்கள் திகைத்தனர். ஏதேனும் அசம்பாவிதம் நடந்து விடுமோ என்று பயந்தனர். அதற்கு மாறாக தந்தை ஒபாமா அமைதியாக எழுந்தார். தன் முகத்தில் புன்னகை தவழ அந்த வெள்ளையரை நோக்கி நடந்தார். கேட்டாரைப் பிணிக்கும் தகையவாய விரிவுரையொன்றை நிகழ்த்தினார்.

கண்மூடித்தனமான கொள்கை அமெரிக்காவின் கனவு. அது அள்ளித்தரவிருக்கும் தாராளம், சர்வ மனித உரிமை ஆகியன பற்றி விரிவான விளக்கம் அவரிடமிருந்து மடை திறந்த வெள்ளமாகப் பாய்ந்தது. பராக் ஒபாமாவின் தந்தை பேசி முடித்தவுடன் வெள்ளையர் தன் சட்டைப் பையிலிருந்து நூறு டொலர்களை எடுத்து அவரின் கையில் வைத்தார். அத்தோடு அன்றைய உணவு, குடிவகைச் செலவையும் தானே செலுத்தினார். அந்த மாசத்துக்குரிய அவரின் அறையின் வாடகையையும் செலுத்தினார்.

ஒபாமா இளம் வயதையடைந்த காலத்திலும் அவரால் இக் கதையின் உண்மையை நம்பமுடியவில்லை. பல வருடங்கள் கழிந்த பின் ஒருநாள் அவருக்கு தொலை பேசி அழைப்பு ஒன்று வந்தது. அமெரிக்காவில் வாழும் யப்பானியர் ஒருவர் பேசினார். 'ஒபாமா' என்ற பெயரை செய்தித்தாள் ஒன்றில் படித்தாராம். 'ஒபாமா'வின் நேர்காணல் அதில் பதிவாகியிருந்தது. அது பழைய ஞாபகங்களை நினைவுக்குக் கொண்டு வந்தது. அவருக்கு தூக்கிவாரிப் போட்டதாம். கையும் காலும் அசைய மறுத்தன. காரணம் 'ஒபாமா' தன்னுடன் ஒன்றாக ஹவாயில் படித்தவர். அவர் இப்போது அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் விரிவுரையாளர். அந்தக் காலத்தில் ஒபாமாவின் தந்தை எவ்வாறு வெள்ளைக்காரனை எதிர்கொண்டார் என்பதை விபரித்தார். அவரிடமிருந்து வெள்ளையர் பரிதாபமான நிலையில் விலைகொடுத்து தந்தையின் மன்னிப்பை சம்பாதித்தார் என்ற கதையையும் கூறினார். கதை உண்மைதான் என்பதை நம்பாமல் இருக்கமுடியவில்லை. (தொடரும்)


தந்தையுடன் ஒபாமா

# இந்தியா எமக்கு செய்யும் உதவி இலங்கை விவகாரத்தில் தலையிடாமல் இருப்பதே

## ஜே.வி.பி.யின் அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



இலங்கையின் பிரச்சினை முடிவு ஒன்றைக் காணவுள்ள தீர்க்கமான இந்த கட்டத்தில் இந்தியா எமக்கு செய்ய வேண்டிய உதவி என்னவென்றால் ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பதேயாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற குழு தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இந்தியா மருத்து உதவியை வழங்குகின்றமை மற்றும் இலங்கை விடயம் குறித்து அமெரிக்காவில் ஆராயப்படுகின்றமை தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தற்போதைய நிலைமையில் எமது படைவீரர்கள் இந் நாட்டின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றனர். பிரதேசங்கள் முழுமையாக மீட்கப்பட்ட பின்னர் அப்பிரதேசங்களில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு உடனடி அபிவிருத்தி மேற்கொள்ளப்பட வேண்டும். இந் நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் எமது நாட்டின் இறையாண்மையை கேள்விக்குறியாக்கும் வகையில் நடந்துகொள்கின்றன. இலங்கைக்கு மருத்துவ குழுவினரை அனுப்ப வேண்டிய அவசியம் இந்தியாவுக்கு இல்லை. இரண்டு நாடுகளின் நட்புறவின் அடிப்படையில் வேண்டுமானால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களை இந்தியா அனுப்பியிருக்கலாம்.

ஆனால் இந்தியாவின் மருத்துவ குழுவினர் இலங்கை வந்து புல்மோட்டையில் தள வைத்தியசாலையை அமைத்து செயற்படுவதை அனுமதிக்க முடியாது. இது எமது நாட்டின் இறைமையை மீறும் செயலாகும். இதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கக்கூடாது.

இந்தியா முதலில் தனது நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்து அவர்களை முன்னேற்ற வேண்டும். அதனைவிடுத்து இலங்கையின் விவகாரங்களில் மூக்கை நுழைத்துக்கொண்டிருப்பது முறையல்ல.

இந்தியா மீண்டும் ஒருமுறை வரலாற்று தவறுகளை இழைப்பதற்கு முயற்சிக்கக் கூடாது.

தற்போதைய நிலைமையில் இந்தியா எமக்கு செய்ய வேண்டிய மிகப் பெரிய உதவியானது ஒன்றும் செய்யாமல் வெறுமனே இருப்பதாகும். இதேவேளை அமெரிக்காவும் எமது விடயங்களில் அவதானம் செலுத்துவதை நிறுத்தவேண்டும். அமெரிக்கா பல உலக ஜனநாயக நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு அங்கு அழிவை ஏற்படுத்தியுள்ளது. அந்த விளையாட்டை அமெரிக்கா இலங்கையில் நிகழ்த்த முயற்சிக்கக்கூடாது. மொத்தத்தில் அமெரிக்க மற்றும் இந்திய தலை யீடுகளை மக்கள் விடுதலை முன்னணி முற்றாக எதிர்ப்பதுடன் நிராகரிக்கின்றது. (ஓ-5)

## முச்சக்கர வண்டிகளுக்கு மானிய விலையில் பெற்றோல்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி வங்கிச் சங்கத்தினால் அப்பிரதேச முச்சக்கர வண்டிகளுக்கு மானிய விலையில் பெற்றோல் விநியோகிக்கப்பட உள்ளது.

பிரதேசத்தைச் சேர்ந்த முச்சக்கர வண்டிகளில் உரிமை யாளர்கள் பிரதேச செயலகத்தில் உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து தமது பகுதி சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் கொடுத்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலாளர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.


பொது மக்களை ஏற்றி இறக்கும் முச்சக்கரவண்டிகளுக்கு மாதாந்தம் 75 லீற்றர் பெற்றோல் லீற்றருக்கு 20 ரூபா குறைத்து பெறுவதற்கு அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-29)

# பொதுக்கூட்டங்களில் கலந்து ஆபத்துக்களில் சிக்க வேண்டாம்

## அமைச்சர்களுக்கு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டாம் என்று இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.



அமைச்சர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மக்களின் வாக்குகளை கவரும் நோக்கத்துடன் அமைச்சர்கள் பொதுக் கூட்டங்களில் அவசியமின்றி கலந்துகொள்வதைத் தவிர்த்தல் வேண்டும்.

சரியான பாதுகாப்புக்கள் இன்றி பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு ஆபத்துக்களில் சிக்க வேண்டாம் என நான் முன்னரும் அமைச்சர்களை எச்சரித்திருந்தேன்.

இந்த வருடம் பொதுத் தேர்தலை நடத்தும் திட்டம் அரசிற்கு இல்லை. அமைச்சர்கள் பலர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு பிரிவினரை தவறாகப் பயன்படுத்தி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

அக்குரச பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்தே அமைச்சர்களுக்கான அவசர கூட்டம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டதுடன், மஹிந்த இந்த அறிவித்தலையும் வெளியிட்டுள்ளார். (ஓ-5)



வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி விளையாட்டு மைதானத்திற்கான காணியை உத்தியோக பூர்வமாக கையளிக்கும் நிகழ்வில் யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் மங்கல விளக்கேற்றுவதையும்,அருகில் கல்லூரி அதிபர் எஸ்.மகேந்திரன் நிற்பதையும், அரசாங்க அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் ஆவணங்களை பருத்தித்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா, கல்லூரி அதிபர் ஆகியோரிடம் கையளிப்பதையும் படத்தில் காணலாம்.(படங்கள்: நீர்வேலி செய்தியாளர்)


2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

(13.03.2009 வெள்ளிக்கிழமை)



மண்ணில் 07 11 1980

விண்ணில் 13 03 2007

அமரர் மு.நந்தகுமார்

கண்ணீரோடு கடந்த இரண்டாண்டில்
காற்றைப் போல கனக்குதடா உன் நினைவுகள்
நேற்றுப் போல இருக்குதடா நந்தா
வேதனைத் தடங்கள்!
எம் மண்ணில் சாவுகள் எத்தனையோ
மன நோவுகள் தொடர்கதையோ
சிலுவை சுமக்கும் கடவுளே -எம்
நலிவைப் போக்குமையா...
நந்தனின் ஆத்மாவுக்கு சாந்தி கொடும்

குடும்ப உறவுகள்
28/2 A.V.றோட் ,கொழும்புத்துறை

(2397)


# யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்

## ஹெல உறுமய தலைவர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியா, அமெரிக்கா , பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு அடி பணிந்து இலங்கை அரசாங்கம் , விடுதலைப் புலிகளுடன்யுத்த நிறுத்தத்தை மேற்கொள்வது என்பது தமது கழுத்தைத் தாமே வெட்டிக் கொள்வதற்கு ஒப்பான தாகும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித் துள்ளது.

வன்னியிலுள்ள மக்கள் தொடர்பில் மீண்டும் இந்தியா, பிரிட்டன் , அமெரிக்கா போன்ற நாடுகள் தலையிட ஆரம்பித் துள் ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் தலை வரும் , பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவெல மேதானந்த தேரர் இதனைத் தெரிவித்தார்.

தேரர் மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானில் வைத்து எமது கிரிக்கெட் வீரர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தின் பின்னணி யிலும் புலிகள் இருப்பது புலனாகியுள்ளது.

இவ்வாறான பயங்கரவாதமான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பாதுகாப் பதற்கு ஏன் இந்த நாடுகள் முயற்சிக்கின்றன. என கேள்வி எழுப்ப விரும்புகிறேன்.

மாத்தறையில் இடம் பெற்ற முஸ்லிம் பள்ளிவாசல் மத நிகழ்ச்சியில் தாக்குதலை நடத்தி பல உயிர்களை புலிகள் செவ்வாய்க் கிழமை பலியெடுத்தனர். இவையெல்லாம் இந் நாடுகளின் கண்களுக்குத் தெரியவில் லையா?


இலங்கை சுயாதீனமான இறையாண்மை கொண்ட நாடு. எனவே இந் நாட்டுப் பிரச்சி னையில் தலையிடும் உரிமை எவருக்கும் கிடையாது.

அதே வேளை, இந்த நாடுகளுக்கு அடி பணிந்து அரசாங்கம் யுத்த நிறுத்ததத்தை அறிவிக்குமானால், அது தமது கழுத்தைத் தாமே வெட்டிக் கொள்ளும் நிலைக்கு ஒப்பானதாகும்.

எனவே , கடுமையான தொனியில் உத்தி யோக பூர்வமாக யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லையெனப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்தார். (ஓ-5)


# பாக். அதிபர் சர்தாரிக்கு எதிராக நவாஸ் ஷெரீப் திடீர் கிளர்ச்சி

## இராணுவப் புரட்சி ஏற்படும் அபாயம்



(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும், நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக் கட்சியும் பிரதான அரசியல் கட்சிகள் ஆகும். கடந்த ஆண்டு பாராளு மன்ற தேர்தல் நடந்த போது பெனாசிர் பூட்டோ தீவிரவாதிக ளால் கொல்லப்பட்டார். தேர்தலில் அவரு டைய கட்சி அதிக இடங்களை கைப்பற்றி ஆட்சி அமைத்தது.**



**புதிய பிரதமராக கிலானி பதவி ஏற்றார். பெனாசிரின் கண வர் சர்தாரி அதிபர் ஆனார். இந்த நிலையில் நவாஸ் ஷெரீப் பும், அவரது தம்பியும் தேர்தலில் போட்டியிட தடை விதித்து பாகிஸ் தான் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டது. இதற்கு சர்தாரி தான் காரணம் என்று நவாஸ் ஷெரீப் கருதினார்.**

**இதனால் சர்தாரிக்கும், நவாஸ் ஷெரீப்புக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.**

இதைத் தொடர்ந்து முஷராப் ஆட்சியில் இருந்த தலைமை நீதிபதி உள்ளிட்ட நீதிபதி களை மீண்டும் நியமிக்க வலியுறுத்தி இஸ்லா மாபாத் நோக்கி மாபெரும் பேரணி நடை பெறும் என்று நவாஸ் ஷெரீப் அறிவித்தார்.


கராச்சி நகரில் 12 ஆம் திகதி தொடங்கும் இந்த பேரணி, 16 ஆம் திகதி அன்று இஸ்லா மாபாத்தை சென்றடையும். வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொள்கின் றனர். 16 ஆம் திகதி அன்று பாராளுமன்றத் துக்கு வெளியே போராட்டம் நடைபெறுகி றது. 4 நாட்கள் இடைவிடாமல் பேரணி நடை பெற இருப்பதால் பெரிய அளவில் சட்டம் – ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்று தெரி கிறது.

நவாஸ் ஷெரீப் போராட்டத்துக்கு சட்டத் தரணிகள் சங்கங்களும் பெருமளவில் ஆத ரவு அளித்துள்ளன. முக்கிய எதிர்கட்சிகளும் ஆதரிக்கின்றன. இதனால், பாகிஸ்தானில் பெரிய அளவில் போராட்டம் வெடிக்கும் சூழ் நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே, முஷராப் அதிபராக இருந்த போது தலைமை நீதிபதி நீக்கப்பட்டதை எதிர்த்து பெரிய அளவில் சட்டத்தரணிகள் போராட்டம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

அதே நேரத்தில் வடமேற்கு எல்லைப்புற மாகாண மற்றும் பழங்குடி இன பகுதிகளில் தலீபான், அல்கொய்தா தீவிரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கி வருகிறது. அவர்களு டன் அதிபர் சர்தாரி பேச்சு நடத்த முன் வந் தார். இஸ்லாமாபாத் நகருக்கு அருகில் வரை தீவிரவாதிகளின் ஆதிக்கம் விரிவடைந்து விட்டது.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் மீது நடந்த தாக்குதல் உட்பட நாளுக்கு நாள் தீவிரவாதி களின் கொட்டம் பாகிஸ்தானில் அதிகரித்து வருகிறது. இந்தியாவுடன் தொடர்ச்சியாக விரோதப்போக்கு மற்றும் மிகப்பெரிய பொரு ளாதார சரிவு போன்ற காரணங்களால் பாகிஸ் தானில் அரசியல் நெருக்கடி அதிகரித்து வருகிறது.



இதற்கிடையே, பாகிஸ்தான் இராணுவ தளபதி பர்வேஷ் கியானி, கடந்த மாதம் அமெ ரிக்காவில் பயணம் மேற்கொண்டார். அவர் நாடு திரும்பியதும் இராணுவ அதிகாரிகளு டன் ஆலோசனை நடத்தினார். பின்னர் 16 ஆம் திகதிக்குள் சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும். இல்லாவிட்டால் இராணுவம் தனது கடமையை செய்யும் என்று அதிபர் சர் தாரியை எச்சரித்தார்.

### எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது இம்ரான்கான் தலைமறைவு

இந்த சூழ்நிலையில், அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த திட்டமிட்டு இருந்த நூற்றுக் கணக்கான சட்டத்தரணிகள், மனித உரிமை அமைப்பினர் மற்றும் எதிர்கட்சி தலைவர் களை பொலீசார் தொடர்ந்து கைது செய்து வரு கின்றனர். சீருடை அணியாத உளவுத்துறை யினரும் பொலீசாருக்கு உதவுகின்றனர்.

சட்டத்தரணிகள் போராட்டத்துக்கு முழு ஆதரவு அளித்துள்ள முன்னாள் கிரிக்கெட் வீரரும், அரசியல் கட்சி தலைவருமான இம் ரான்கான் வீட்டிலும் சோதனை நடந்தது. ஆனால் பொலீசார் வருவதற்குள் அவர் தலை மறைவாகி விட்டார்.

## உலக தரிசனம்

நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது சகோதரர் ஷாபாஸ் ஆகிய இருவரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. அதை பாகிஸ்தான் அரசு மறுத்தது.

பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களி லும் தலைநகர் இஸ்லாமாபாத்திலும் நவாஸ் ஷெரீப் கட்சியை சேர்ந்த ஏராளமான பிரமு கர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்சியின் தலைவர் ராஜா ஜப்ருல் உள்பட முக்கிய தலை வர்கள் பலர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள் ளனர்.

பஞ்சாப், சிந்து மாகாணங்களில் 15 நாட் களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இந் நிலையில், வடமேற்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் நடந்த ஒரு பொதுக்கூட் டத்தில் நவாஸ் ஷெரீப் பேசினார்.

அப்போது அவர் காலாவதியான பழைய முறையை மாற்ற நாங்கள் விரும்புகிறோம். அடுத்த 3 அல்லது 7 நாட்களுக்குள் பாகிஸ்தா னின் எதிர்காலத்தை நாம் மாற்றி விடலாம். அழிவுப் பாதையில் பாகிஸ்தான் செல்லும் போது அதை பாதுகாப்பது உங்களுடைய கடமை. உயரிய அமைப்புக்கள் அனைத்தும் சிதைக்கப் படும்போது எந்த சமரசத்தையும் ஏற்க முடியாது என்றார்.

மேலும் அவர், திட்டமிட்டபடி மாபெரும் பேரணி தொடங்கும். பாகிஸ்தானின் எதிர் காலத்தை மாற்றுவதற்காக தடையை மீறி அனைவரும் வாருங்கள். 16 ஆம் திகதி அன்று நாம் அனைவரும் சந்திப்போம் என்றும் உறு தியாக அறிவித்தார்.

இதற்கிடையே சர்தாரியை துரத்தி விட்டு ஆட்சியை கைப்பற்ற இராணுவமும் முயற்சி செய்து வருகிறது. தற்போது ஈரான் தலை நகர் டெஹ்ரானில் சர்தாரி இருக்கிறார்.

எனவே, ஈரானிலோ அல்லது துபாயிலோ இருக்குமாறும், பாகிஸ்தானுக்கு திரும்ப வேண் டாம் என்று சர்தாரி அறிவுறுத்தப்பட்டு இருக் கிறார். இதனால் பாகிஸ்தானில் மீண் டும் இரா ணுவ புரட்சி ஏற்படும் சூழ்நிலை உருவாகி இருக் கிறது. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இந்த அரசி யல் குழப்பங்களுக்கு இடையே பிரதமர் யூசுப் ரசா கிலானியை இராணுவ தளபதி பர்வேஷ் கியானி நேற்று முன்தினம் சந்தித்து பேசி னார். சந்திப்பு குறித்த முழு விவரங்கள் வெளி யிடப்பட வில்லை. (ஓ-5)

## வெள்ளை மாளிகையில் மகளிருக்கு தனிக்குழு அதிபர் ஒபாமா முடிவு

(வோஷிங்டன்)

மகளிர் விவகாரங்கள் தொடர்பாக தனக்கு ஆலோசனை கூறுவதற்காக அமெ ரிக்கா அதிபர் பராக் ஒபாமா வெள்ளை மாளி கையில் மகளிர் குழுவை ஏற்படுத்தியுள்ளார்.

இக் குழுவுக்கு தனது நண்பரும் மூத்த ஆலோசகருமான வாலெரி ஜாரெட்டை தலைவராக நியமிக்கவும் ஒபாமா திட்டமிட் டுள் ளார்.

இத் தகவலை வெள்ளை மாளிகையின் பெண் செய்தித் தொடர்பாளர் ஜென் ஸகி புதன்கிழமை தெரிவித்தார்.

வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையின் இணையத்தளத்தில் இத் தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஓ-5)

## ஜேர்மனியில் பாடசாலைக்குள் நுழைந்து முன்னாள் மாணவன் துப்பாக்கிச் சூடு

### 10 பேர் பலி ; பலர் காயம்

(வின்னென்டென்)

ஜேர்மனியில் பாடசாலைக்குள் நுழைந்த முன்னாள் மாணவன் கண்மூடித்தனமாக துப்பாக்கியால் சுட்டதில் 10 பேர் கொல்லப் பட்டனர்.



ஜேர்மனி, தென்மேற்கு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்று முன்தினம் காலை மாணவர்கள் வழக்கம் போல் தங் களது வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந் தனர். அப்போது, அங்கு கறுப்பு உடை அணிந்து சென்ற ஒருவன் கண்மூடித்தன மாக மாணவர்களை நோக்கிச் சுட்டான். இதில் பாடசாலை மாணவர்கள், முதியவர் உள்ளிட்ட 10 பேர் அதே இடத்தில் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து இறந்தனர்.

இதையடுத்து, பாடசாலை வளாகத்தி லிருந்து அந்த நபர் தப்பியோடிவிட்டான். சம் பவ இடத்தில் பொலீசார் விசாரணை நடத் தினர் அப்போது பாடசாலையில் தாக்குதல் நடத்திய நபர் அதே பாடசாலையில் படித்த முன்னாள் மாணவர் என்ற விவரம் தெரிய வந்தது.

ஜேர்மனி பாடசாலைகளில் கடந்த சில ஆண்டுகளாக மாணவர்கள் மீது நடத்தப் படும் தாக்குதல்கள் அதிகரித் துள்ளன.

கடந்த 2006 ஆம் ஆண்டு முகமூடி அணிந்து பாடசாலைக்குள் நுழைந்த மர்ம நபர், மாணவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தானும் தற்கொலை செய்து கொண் டார். இதில் 11 மாணவர்கள் காயமடைந்தனர். அது போலவே, 2002 ஆம் ஆண்டு நடந்த மற்றொரு துப்பாக்கிச் சூட்டில் 17 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.


இந் நிலையில் நேற்று முன்தினம் மீண் டும் நடந்துள்ள இந்த சம்பவம், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பீதியை ஏற் படுத்தியுள்ளது. தப்பியோடிய நபரைப் பிடிக்க பொலிசார் ஹெலிகொப்டர் மூலம் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். (ஓ-5)

## ஆப்ரகாம் லிங்கனின் கைக்கடிகாரத்தில் அமெ.சிவில் போர் குறித்த இரகசிய செய்தி

(வோஷிங்டன்)



அமெரிக்க முன்னாள் அதிபர் ஆப்ரகாம் லிங்கனின் தங்க கைக் கடிகாரத்தில் அமெரிக்க சிவில் போர் குறித்த இரகசிய செய்தி செதுக் கப்பட்டிருப்பது தெரியவந் துள்ளது.



அமெரிக்காவின் 16 ஆவது அதிபராக ஆப்ர காம்லிங்கன் கடந்த 1860 ஆம் ஆண்டு பதவி ஏற்றார். 1861ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள் நாட்டு போர் நடந்தது.

அதிருப்தியாளர்கள் கரோலினா மாகாணத் தில் உள்ள சம்ப்டர் கோட்டை மீது தாக்குதல் நடத் தினர். இந்நிகழ்ச்சியை நினைவு கூரும் விதத்தில் ஆப்ரகாம் லிங்கனின் தங்க கைக்கடிகாரத்தை பழுது பார்த்த ஜோனா தன் தில்லான் என்பவர். *சம்ப்டர் கோட்டை போராளிகளால் தாக்கப்பட்டது. நன்றி கடவுளே! அரசு எங்களிடம் உள்ளது.* என்ற ஆங்கில வாசகத்தை கடிகாரத்தினுள் எழுதி யுள்ளார். அவர் குறித்த திகதி எப்ரல் 13. 1861. ஆனால் இந்த வாசகம் எழுதப்பட்டது ஆப்ரகாம் லிங்கனுக்கு தெரியாது. இந்த வாசகத்தை எழுதியதாக 45 ஆண்டுகள் கழித்து தில்லான் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் தெரிவித்திருந்தார்.

அமெரிக்க அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள ஆப்ரகாம்லிங்கனின் கைக் கடி காரத் தில் செதுக்கப்பட்டுள்ள இந்த வாசகத்தை திறந்து பார்க்க வேண்டும் என தில்லானுடைய எள்ளு பேரன் சமீபத்தில் மியூசியத்தின் அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். இதையடுத்து மியூசி யத்தில் உள்ள கடிகாரம் திறந்து பார்க்கப்பட்டது. அதில் இந்த வாசகம் செலுத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. (ஓ-6)

# அமெரிக்காவும் இந்தியாவும் தமிழர்களுக்கு உதவமாட்டார்கள்

## விக்கிரமபாகு கருணாரட்ண சுவிஸ் வார ஏட்டிற்குப் பேட்டி

நேற்றைய தொடர்ச்சி...

**தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டங்களில் இந்திய இடது சாரிக் கட்சிகள் விலகியே இருந்தன. ஆனால், அண்மைக் காலத்தில் அவர்கள் மிகவும் உள்வாங்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த மாற்றத்துக்கான காரணம் என்னவென நினைக்கின்றீர்கள்?**

இது விடயத்தில் எங்களின் பங்களிப்பு முக்கியமானது. ஒரு வருடத்துக்கு முன்னர் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் நாங்கள் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். இது ஒரு இனவாதப் பிரச்சினை அல்ல. இது ஒரு தேசியப் பிரச்சினை என்பதைப் புரியச் செய்தோம்.

இம்முறையும் இது தொடர்பில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம்.

அது மட்டுமன்றி நான் ஜே.வி.பி. தொடர்பாக ஒரு நூலும் எழுதினேன். அதேவேளை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகள் (வலது மற்றும் இடது) ஜே.வி.பி. தொடர்பில் தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தன. அவர்கள் தமது மாநாடுகளுக்குக் கூட ஜே.வி.பி.யை அழைத்திருந்தனர். விடுதலைப் புலிகள் தொடர்பாக ஜே.வி.பி. கூறுபவை சரியென அவர்கள் நினைத்திருந்தனர்.

ஆனால், நாங்கள் அவர்களின் கண்களைத் திறந்தோம். ஜே.வி.பி.யின் கருத்துக்கள் இனவாத அடிப்படையிலானவை எனப் புரியச் செய்தோம். இது ஒரு குட்டி அதிகாரம் கொண்ட சிங்களத் தேசியக் கட்சி என்பதை விளக்கினோம்.

உலக மார்க்சியக் கண்ணோட்டம் வேறு விதமானது. அந்த அடிப்படையில் இந்திய இடதுசாரிகளுக்கும் விடயங்கள் புரியத் தொடங்கியது. இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடல்களை நடத்தினோம்.

இந்த வருடமும் கூட நான் சென்னை சென்றிருந்தேன். அங்கு சி.பி.ஐ. மற்றும் சி.பி.ஐ. எம். ஆகிய கட்சிகளுடன் தொடர் கலந்துரையாடல்களை நடாத்தினேன். அவர்கள் தமது அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டார்கள்.

சி.பி.ஐ. எம் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், அவர்கள் சுயாட்சியை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழர்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் போராடுகின்றார்கள்.

அதேவேளை, சி.பி.ஐ. தமிழ் மக்களின் விவகாரம் சுயநிர்ணய உரிமையுடன் சம்பந்தப்பட்டது. தமிழ்த்தேசியம் காப்பாற்றப்பட வேண்டும் என ஏற்றுக்கொண்டுள்ளது.

ஏனெனில் அவர்கள் மத்தியிலும் தேசிய பிரச்சினை உள்ளது. தமிழ் நாட்டுத்தேசியம் உள்ளது. இந்தியாவினுடைய பார்ப்பனிய ஆசிய சிந்தனை புதிய உலகில் செல்லுபடியாகது. ஆனால் ஒடுக்குமுறையாட்சியாளர்கள் அதனைப் பயன்படுத்துகிறார்கள்.

இது விடயத்தில் தா.பாண்டியன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். பாண்டியனுக்கு இது விடயத்தில் போதிய அறிவு உள்ளது. அவர்களுடனான கலந்துரையாடலின் போது அவருக்குரிய தெளிவைக் கண்டு கொள்ள முடிந்தது. எனவே இந்தப் போராட்டம்-தென்னிந்தியப் போராட்டம் -மிகவும் முக்கியமானது. இது தொடர வேண்டும்.

மத்திய அரசு பொய் சொல்லுகிறது. முழுக்க முழுக்கப் பொய். அவர்கள் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கு வேறு கரிசனை உள்ளது.

**விடுதலைப்புலிகள் தொடர்பாக உங்கள் அபிப்பிராயம் என்ன? அவர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளா?**

நான் நினைக்கிறேன். விடுதலைப் புலிகள் தமிழ் மக்களில் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். அவர்களே போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். எனினும், அவர்களின் அதிகாரம் கொண்ட குணாம்சத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

உலக முதலாளித்துவம் தமிழர்களுக்கு உதவி செய்யும் என நான் நினைக்க வில்லை. அமெரிக்க தாராளவாதம் அவர்களுக்கு உதவும் என நான் நினைக்கவில்லை. இந்தியா உதவும் என நான் நினைக்க வில்லை. தொழிலாளர்களும் சோசலிசமுமே இறுதியில் உதவப் போகின்றது.

புலிகளின் போராட்டம் வளைந்து கொடுக்காத போராட்டம். அவர்களின் எவருக்கும் தலை



வணங்காத குணாம்சத்தை நான் மதிக்கிறேன். அவர்கள் தமது போராட்டத்தை உறுதியுடன் தொடர்கிறார்கள்.

தமிழர்களுக்காகக் குரல் தருவது இலகுவானது. ஆனால் அவர்களுக்காகப் போராடுவது கடினமானது. அந்த வகையில் விடுதலைப் புலிகளைப் பாராட்டுகிறேன். அதேவேளை அவர்களுடைய முதலாளித்துவ சிந்தைனக்கு நான் எதிரானவன். குடிமக்கள் மீதான வன்முறைக்கு நான் எதிரானவன்.

இதற்கெதிரான அனைத்துலக அபிப்பிராயம் உள்ள போதிலும் ஆயுத ரீதியில் போராடுவதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை மறுக்க முடியாது. ஆயுதப் போராட்டம் என்பது குற்றமல்ல. ஆயுதப் போராட்டம் என்பது பயங்கரவாதமல்ல. தம்மைக் காத்துக் கொள்வதற்கு எந்தவொரு சமூகத்திற்கும் உரிமையுள்ளது.

அதேவேளை, பயங்கரவாதம் என ஜ.நா. சபையாலும் ஏனைய மனித உரிமைகள் அமைப்புக்களாலும் வரையறுக்கப்பட்டுள்ள விடயங்களை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகள் தொடர்ந்து போராடி வரும் நிலையில் தற்போது உழைக்கும் வர்க்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளார்கள் அவர்கள் உழைக்கும் வர்க்கத்துடனும் கம்யூனிஸ் கட்சியுடன் தொடர்பாடலுக்குத் தயாராக இருக்கின்றார்கள். எங்களுடனும் பேசத் தயாராக உள்ளனர். அவர்கள் என்டைய கட்டுரைகளையும் விமர்சனங்களையும் பிரசுரிக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி அவர்கள் மக்களின் நலனிலும் அக்கறை கொண்டுள்ளார்கள். அவர்கள் மக்கள் ஆதரவை பெருமளவில் கொண்டுள்ளார்கள். 50,60 ஆயிரம் தலையாட்டிகளை ஒரு நிகழ்வுக்கு அழைத்துவர முடியாது. ஆயிரம் இரண்டாயிரம் பேரை வேண்டுமானால் அழைத்து வர முடியும்.

அதனை-புலிகளின் சக்தியை- நாம் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அங்கே தான் புலிகளின் பலம் உள்ளது. தற்போது, அவர்கள் உழைக்கும் மக்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றார்கள். இது வரவேற்கத் தக்கது.

உண்மையில் பா.நடேசன் எங்கள் கட்சியின் முன்னை நாள் உறுப்பினர். அவர் 10 வருடம் எமது கட்சியில் இருந்தார். அவர் ஒரு அரசியல் தலைமைத்துவத்தில் இருப்பது மகிழ்வைத் தருகின்றது. அவரிடம் அரசியல் அறிவு உள்ளது. நீங்கள் எங்கு இருந்தாலும் உங்களிடம் இருக்கும் அரசியல் அறிவு பயன் தரவல்லது.

அந்த வகையில் நடேசனால் சிறந்த பாத்திரத்தை வகிக்க முடியும். அடுத்தவர் பரா. அவர் ஈரோசில் இருந்தவர். ஈரோஸ் ஒரு அரசியல் இயக்கம் அவருக்கும் குறிப்பிட்ட அரசியல் பயிற்சி இருக்கும்.

அவர்கள் போராட்டத்தை மக்கள் மயப்படுத்த முயற்சிக்க வேண்டும். மக்கள் மயப்படுத்தப்பட்டவர்களாக அவர்கள் விளங்க வேண்டும் உழைக்கும் மக்களின் குறைகளைக் கேட்க வேண்டும். அவ்வாறு இருந்தால் வெற்றி நிச்சயம்.

**தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக எதனை முன்வைக்க நினைக்கின்றீர்கள்?**

சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்திய வண்ணம் தமிழர்களும் சிங்களவர்களும் இணைந்து வாழ முடியும் என நான் நம்புகின்றேன். அது தன்னிச்சையானதாக இருக்க வேண்டும். பலவந்தமானதாக இருக்கக் கூடாது.

சுயாட்சி வழங்கப்பட்டு பொலிஸ் அதிகாரம் தரப்பட்டு அந்த அடிப்படையில் நாம் இணைந்து வாழ முடியும் இதுவே என் அபிப்பிராயம். அதேவேளை தனிநாடு அமைப்பதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அதுவே தமிழ் மக்களின் விருப்பமாக இருந்தால், அதற்கு நாங்கள் ஆதரவு தந்தேயாக வேண்டும்.

ஆனால், அதுவே ஒரேயொரு தீர்வாக இருக்குமானால் நான் கவலைப்படுவேன். இன்னமும் கூட கஷ்டப்படும் சிங்கள – தமிழ் உழைக்கும் மக்கள் ஐக்கியப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவே நான் நம்புகின்றேன்.

ஒரு சில சரண்டல்வாதிகள் மாத்திரமே இந்த ஐக்கியத்துக்கு எதிரானவர்கள். அவர்களை முறியடித்து கௌரவத்துடன் கூடிய தன்னிச்சையான ஐக்கியத்தை எட்ட முயற்சிக்க வேண்டும். அதவே எனது தீர்வு.

**நீங்கள் கூறியதன் பிரகாரம் இந்தியா போரில் ஈடுபட்டு வருகின்றது. அதேவேளை சில வெளிநாடுகள் யுத்தத்துக்கு முடிவுகாண விரும்புகின்றன. எனினும் இந்தியா அதற்குத் தடையாக இருப்பதாக அவை கருதுகின்றன. இத்தகைய நிலையில் இந்தியாவைப் புறந்தள்ளி மேற்குலக நாடுகள் யுத்தத்தை நிறுத்த முடியும் எனக் கருதுகின்றீர்களா?**

சாத்தியம். அதனாலேயே நாங்கள் நான்காம் அகிலத்தில் இத்தகைய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினோம். இதில் கலந்து கொண்டவர்கள் தத்தம் நாடுகளுக்குச் சென்று அங்குள்ள ஆளும் வர்க்கத்துக்கு அழுத்தம் தர வேண்டும். அவர்களின் கண்களைத் திறக்கச் செய்ய வேண்டும். இந்தியா உட்பட.

இந்தியா மனிதாபிமானத்தக்கு எதிரான குற்றத்தைப் புரிந்து வருகின்றது. இந்தவேளையில் உலக சமூகம் அதற்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டும். இந்திய மக்கள், குறிப்பாக தென் இந்திய மக்கள் கிளர்ந்தெழுந்து ஆளும் வர்க்கத்துக்கு அழுத்தம் தர வேண்டும். அதற்கூடாக இந்தக் குற்றச் செயலில் இந்தியா ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும்.

**வன்னியில் நடைபெறும் கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளில் புலம்பெயர் தமிழர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களுக்கு நீங்கள் எத்தகைய ஆலோசனையை வழங்க விரும்புகின்றீர்கள்?**

இது ஒரு நல்ல கேள்வி. அவர்கள் மேற்கொண்டு வருகின்ற நடவடிக்கைகள் பெறுமதியானவை. ஆனால், அவர்கள் உழைக்கும் வர்க்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தொழிற்சங்க இயக்கத்துடன் அவர்கள் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

உழைக்கும் மக்களுடன் பிணைப்பை உருவாக்கிக் கொள்ள வேண்டும். முற்போக்கு புத்திஜீவிகளை அணுக வேண்டும். அவர்களின் உதவியைப் பெறவேண்டும். அமெரிக்காவில் நொம் சொஸ்கி போன்று பெல்ஜியத்தில் எரிக்ருசான்ட் போன்று பல புத்திசாலிகள் இருக்கிறார்கள். பலமான தொழிற்சங்கங்கள் உள்ளன. அவர்களின் ஆதரவைப் பெற வேண்டும்.

அது இலகுவானதல்ல. முதற்தடவையில் அவர்கள் எமக்குச் செவி சாய்க்க மாட்டார்கள். மீண்டும் மீண்டும் சென்று வரலாற்றை விளங்கப்படுத்துங்கள். தொடர்பை ஏற்படுத் துங்கள். விளக்கங்களை வழங்குங்கள்.

பாலஸ்தீன இயக்கத்தை, வியட்நாமிய இயக்கத்தை உதாரணமாகக் கொள்ள வேண்டும். அவர்கள் அதனையே செய்தார்கள். ஒருமைப்பாட்டு இயக்கங்களை அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அமைத்தார்கள். ஆயிரக்கணக்கான தொழிற் சங்கங்கள் அவர் களுக்கு ஆதரவாக வந்தன. அங்கே தான் சக்தி உள்ளது. எனவே அத்தகையோரை அணுகுவது அவசியம்.

**மேல் மாகாண சபைத் தேர்தலில் நீங்கள் போட்டியிட இருக்கின்றீர்கள். எனவே எமது பத்திரிகையின் ஊடாக கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு நீங்கள் கூற விரும்புகின்ற செய்தி என்ன?**

நான் மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுகின்றேன். நான் முன்னர் மேல் மாகாண சபை உறுப்பினராக இருந்தேன். அப்போது என்னால் தமிழ் மக்களுக்கு அதிகமாகச் செய்ய முடிந்தது.

இன்றைய நிலையில் எனது தோல்வி தமிழ் மக்களின் தோல்வியாகவே அமையும். எனவே நான் தெரிவு செய்யப்படுவதை தமிழ் மக்கள் உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் எனது குரல் ஓங்கி ஒலிக்கும். எனது குரலுக்கு மேலும் சக்தி கிடைக்கும்.

நான் தோற்றுவிட்டால் மூவாயிரம், நான்காயிரம் வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடையும் இவரின் கருத்துக்கள் பயனற்றவை. இவருக்கு தமிழ் மக்களே ஆதரவு தரவில்லை. இவரை எவருமே தமிழ் மக்கள் கூட மதிப்பில்லை எனப் பரிகசிப் பார்கள். எனவே, இதனை நீங்கள் கேட்பதற்கு விரும்பவில்லை என்றால் என்னை வெல்லச் செய்ய வேண்டும். எனக்கு கிடைக்கும் பலம் உங்கள் விடு தலைக்கே உதவும். உங்களுடைய போராட்டத்துக்கு உங்கள் கௌரவத்துக்கு உதவும்.

இதுவே என்னுடைய செய்தி இது உங்கள் கடமை. நான் என்னுடைய கடமையைச் செய்கிறேன். நான் 1974 இல் இருந்து தமிழ் மக்களின் விடுதலைக்காகச் சளைக்காது போராடி வருகின்றேன். எனக்கு எந்தவொரு பலமும் இருக்கவில்லை.

நான் தொடக்கத்தில் எந்த வித ஆதரவையும் கொண்டிருக்கவில்லை. நான் எங்கு சென்றாலும் நான் கூறுகின்ற விடயத்துக்காக உறுதியுடன் செயற்படுகின்றேன். நான் பலமுள்ளவனாக இருந்தால் உங்களுடைய போராட்டமே வெற்றி பெறும் என்றார் விக்கிரமபாகு கருணாரட்ன. (முற்றும்)

உங்கள் சுவாரங்களைப் பிரித்து வைத்துக் கொள்ளுங்கள்; இதயங்களை ஒன்று சேருங்கள்.

~ அரேபியா

வலம்புரி

## இந்தியாவின் கபடத்தை அம்பலப்படுத்திய கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண

வன்னியில் யுத்தம் நடப்பதற்கு இந்தியாவின் அழுத்தமே காரணம் என நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களில் நியாயம் உணர்ந்தவர் இருக்கிறார்கள் என்பதற்கு கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண நல்லதோர் உதாரணமாவார்.

அன்று முதல் இன்றுவரை தமிழர்களின் பிரச்சினையைஉணர்ந்துகொண்டகருணாரட்ண, தமிழர்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வைக் காணவேண்டுமென வலியுறுத்தி வருபவர்.

எனினும் யதார்த்தவாதி வெகுசன விரோதி என்ற நியதி கருணாரட்ணவின் அரசியல் வாழ்க்கையிலும் இருக்கவே செய்கிறது.

இருந்தும் அவர் உண்மையை-நியாயத்தைக் கூற ஒருபோதும் பின்னின்றதில்லை.

அவ்வகையில், தற்போது வன்னிப் பகுதியில் நடக்கும் யுத்தத்தை வன்மையாகக் கண்டிக்கும் அவர், இந்த யுத்தம் இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே நடப்பதாகவும் கூறியுள்ளார்.

உண்மைக்காகவும், நீதிக்காகவும் குரல் கொடுக்கும் ஒருவர், இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே வன்னி யுத்தம் நடப்பதாகக் கூறியிருப்பது இந்தியாவின் கபட நாடகத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்தியுள்ளது.

அதேநேரம் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா மேற்கொண்டுவரும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றத்தை சர்வதேச சமூகம் கிளர்ந்தெழுந்து கண்டிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டிருப்பது இந்தியாவை வெட்கித் தலைகுனிய வைப்பதாகும்.

இலங்கை நாட்டின் பெரும்பான்மை இனம் சார்ந்த -முக்கியமான அரசியல் கட்சியின் தலைவர் ஒருவர் வன்னி யுத்தத்தைக் கண்டித்திருப்பதும் யுத்தத்தின் பின்னணியில் இந்தியா தான் இருக்கிறது எனக் கூறியிருப்பதும் சாதாரண விடயமல்ல.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டும் இந்தியாவின் கபடத்தை இந்த நாட்டின் சிங்கள மகனொருவர் வெளிப்படுத்தியிருப்பது தூங்கிக் கொண்டிருக்கும் தமிழகத் தலைவர்களை விழிப்பிற்கு உள்ளாக்கும் எனலாம்.

ஆனால் ஆளும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தி.மு.கவும் முதல்வர் கருணாநிதியும் இனிமேலாவது மத்திய அரசின் இரட்டை வேடத்தை புரிந்து கொள்வாரா? அல்லது புரிந்து கொண்டும் ஆட்சி, பதவி, குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நின்று ஈழத்தமிழினத்திற்கு ஊறு விளைவிப்பாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எதுவாயினும் இந்திய மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸுக்கு தகுந்த பாடம் புகட்டுவார்கள் என நம்பலாம்.

# இனவாத கட்சிகள் எவ்விதத்தில் தூற்றினாலும் தமிழ் மக்களுக்காக குரல்கொடுப்பதை நிறுத்தமாட்டேன்

## 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்லவேண்டும் என்கிறார் அமைச்சர் டிலான்

(கொழும்பு)

இனவாதக் கட்சிகள் எனக்கு எதிராக எவ்வித்தில் குரல் கொடுத்தாலும் தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் அமைந்த தீர்வு பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்ற எனது வலியுறுத்தலை நிறுத்த மாட்டேன் என்று துறைமுக அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.



அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர்களான டிலான் பெரேரா மற்றும் ராஜித்த சேனாரட்ன ஆகியோர் வலிறுத்தீ வருகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளமை குறித்து வினவிய போதே அமைச்சர் மேற் கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது ,

இனவாத கட்சிகளின் செயற்பாடுகள் காரணமாகவே நாட்டில் இனப் பிரச்சினை என்ற ஒரு விடயம் உருவானது. அதனால் தான் பயங்கரவாதம் தலை தூக்கியது. பல அழிவுகள் ஏற்பட்டன. தொடர்ந்தும் இனவாதம் வெளிக்காட்டப் படுவதால் எந்த பயனும் கிடைக்கப்போவதில்லை என்ற விடயம் ஏன் இவர்களுக்கு புரியவில்லை என்று தெரியாமல் உள்ளது.

எப்படியிருப்பினும் இன வாதிகள் எனக்கு எதிராக எவ் விதத்தில் குரல் கொடுத்தாலும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும் என்ற எனது நிலைப்பாட்டை மாற்ற மாட்டேன். அத்துடன் அதற்காக குரல் கொடுப்பதை நிறுத்தவும் மாட்டேன்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். சில வேளை அதற்கு அப்பால் சென்று தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க வேண்டி ஏற்பட்டாலும் பரவாயில்லை. அதற்கும் தயங்காமல் இடமளிக்கப்பட வேண்டும். ஆனால் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

இதனை நான் ஆரம்பத்திலிருந்து வலியுறுத்தி வருகின்றேன். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு வருகின்றது. அது சிறந்த விடயம் . ஆனால் பயங்கரவாதம் ஏன் உருவானது என்பது தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். அதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை தீர்த்து விட வேண்டும். அப்போது தான் பயங்கரவாத தோற்கடிப்பின் உண்மையான வெற்றி கிடைக்கும்.

இன வாதம் பேசிக் கொண்டு அரசியல் செய்பவர்களை நாட்டு மக்கள் விரைவில் நிராகரித்து விடுவார்கள். அவர்களை மக்கள் குப்பைத் தொட்டியில் போடும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை என்றார். (ஓ-5)

# அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரே சர்வதேச பிரதிநிதிகளை சந்திக்கின்றனர்

## இதனால் உண்மைகள் மூடிமறைக்கப்படுகின்றன என்கிறார் ஜயலத் எம்.பி

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அப்பாவித் தமிழ் மக்களில் அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிலரே அங்கு செல்கின்ற சர்வதேச பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதனால் உண்மை நிலைவரங்கள் மூடிமறைக்கப் படுவ்தாக ஐக்கிய தேசியக் கட்சியின் மனித உரிமைகளுக்கான பிரதிச் செயலாளரும்,கம்பஹா மாவட்ட எம்.பியுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

புல்மோட்டையில் அமைக்கப்பட்டுள்ள இந்திய அவசர சிகிச்சை நிலையமானது ஒருபோலி . அங்கு இந்திய இராணுவ முகாமே அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதிகாரப் பரவலாக்கலுக்கு செல்லக் கூடாது என்றும் ஜே.வி.பி தெரி வித்திருக்கும் கருத்துக்கள் தொடர்பில் கேட்ட போதே ஜயலத் எம்.பி மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

ஜப்பானின் விஷேட தூதுவர் யசூசிஅகாஷி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான செயலர் ஜோன் ஹோம்ஸ் உள்ளிட்ட வெளிநாட்டுப் பிரதி நிதிகள் வவுனியா நலன் புரி நிலையங்களுக்குச் செல்கின்ற போது அங்கு அரசாங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில தமிழ் மக்களுடனேயே சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இங்கு ஊடகங்கள் விஷேசமாக தமிழ் ஊடகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதனால் நலன் புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள வன்னித் தமிழர்களின் உண்மை நிலைகள் வெளிப்படுவதில்லை.

இதே போல் மோதல்களுக்கு மத்தியில் சிக்கித் தவிக்கின்ற மக்கள் தொடர்பிலும் தகவல்களை அறிந்து கொள்ள முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வன்னிக்குள் சிக்கியுள்ள மக்களின் அன்றாடத் தேவை கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. உணவின்றி, மருந்துகள் இன்றி அல்லல்படுகின்ற ஒரு சமூகத்தின் மீது அக்கறையீனத்தை கடைப்பிடித்து வருவது இன்றைய அர சாங்கமே ஆகும்.

இந் நிலையில் எமது நாட்டு மக்களின் அதுவும் மோதல்களில் சிக்கித் தவிக்கும் அப்பாவித் தமிழ் மக்களின் தேவையுணர்ந்து வைத்திய உதவிகளைமேற் கொண்டு வரும் இந்தியாவின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனிதாபிமான நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் இந்தியாவின் செயற்பாடுகளை ஜே.வி.பி கட்சி கொச்சைப் படுத்திப் பேசுவது ம் அதனை வேறு திசையில் பார்ப்பதும் மனிதத்துக்குப் பொருந்தாத விடயமாகும். தமிழ் மக்களுக்கான உரிமைகள் நிறைவேற்றப்படுவது அதிகாரப் பரவலாக்கத்திலேயே அமைந்துள்ளது.

அதனை அமுல் படுத்துவதுடன் அந்த மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலமே நாடு சுபீட்சமடையும். மாறாக இனவாதத்தை மட்டுமே தமது பிரசா ரமாகக் கொண் டிருக்கும் ஜே.வி.பி இந் நாடு சமாதானத்தை தழுவிக் கொள்வதையும் சக வாழ்வு பெறுவதையும் விரும்பவில்லை. மொத்தத்தில் இந் நாட்டை தீக்கிரையாக்குவதே அக் கட்சியின் நோக்கம்.(ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை 62

# பக்தியின் மொழி தமிழ்

இறை பக்தி என்பது ஒரு பரவச நிலை. தன்னை மறந்து சூழலால் கவரப்பட்டு மனம் ஒன்றியிருத்தல். இந்நிலை வழிபாட்டுப் பயிற்சியால் எளிதில் கைகூடும். அடியார் பலர் இத்தகைய பக்தி வயப்பட்டுப் பல பாடல்களைப் பாடியுள்ளனர். அப் பாடல்களில் அவர்களின் ஆழமான பக்தி உணர்வும் நெறியும் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இறையுணர்வினால் முழுமையாக ஆட்கொள்ளப்படுவதற்கு காட்சியனுபவம் தேவை.

நாளந்தம் காணும் காட்சிகளுக்கு அப்பால் புலன்களைக் குவியப்படுத்த வல்ல காட்சியாக இறைவன் திருக்கோலக் காட்சியை அடியார் கண்டனர். இறைவனுடைய கவின் நிறைந்த தோற்றத்தில் உள்ளடக்கப்பட்டவற்றை உன்னிப்பாகப் பார்க்கின்ற பயிற்சியால் அவற்றைப் பாடல்களிலே விரித்துக் கூற முற்றபட்டனர். தமிழ் மொழிப் பயிற்சியும் செய்யுள் புனையும் ஆற்றலும் அதற்கு உறுதுணையாய் இருந்தன.

முதுமை நிலையில் நாவுக்கரசர் பாடிய பாடல்களில் இறைவன் கோலத்தை மிக உன்னிப்பாக பார்த்த தன்மையைக் காணக் கூடியதாகவுள்ளது. கேசாதிபாதமாக இறைவன் கோலக் காட்சியை அப்பர் பாடியுள்ளார். வன்னி, வாளரவு, மத்தம், மதியம், ஆறு என்பவற்றைத் தலையிலே சிவன் சூடியிருக்கும் திருக்கோலம் அவர் பார்வையில் முழுமையாகப் பதிவாகிறது. இறைவன் திருமேனி வண்ணம் கண்களை நிறைவிக்கின்றது. மின்னல் போலப் பளிச்சென்று உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வனப்பு அவர் கண்ட கோல அழகு. அந்த வனப்பின் சிறப்பை எல்லோருக்கும் கூற வேண்டும் என்ற நினைப்புத் தோன்றுகிறது. அருகிலே உமையம்மையோடு வீற்றிருக்கும் திருக்கோலம் மேலும் மனதைப் பரவசப் படுத்துகிறது. நினைப்பவர் நினைவில் நிறையும் இறைவன் கோலத்தை பாடுகின்றார் .

சிவனையும் உமையையும் ஒரு சேரப் பார்க்கக் கிடைத்த பேறு நாவுக்கரசர் வாழ்க்கையில் மீண்டும் கிடைத்த போது அவர் நெஞ்சுருகி நிற்கும் நிலை பாடலிலே சிறப்பாக வெளிப்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பட்டுள்ளது. சிவனையே நினைந்து பாடும் இன்னிசைத் தொண்டர்களையும் திருக்கோயிலில் கண்டபோது அவரது உள்ளம் பக்தியின் பான்மை கண்டு வியந்து போகிறது. திருவாப்பாடி தலத்திலே நாளும் இன்னிசை பாடி வழிபாடு செய்யும் தொண்டர்களில் ஒருவனாகத் தன்னையும் இணைத்துக் கொள்கிறார். அதுவே மன நிறைவு தருமென எமக்கும் உணர்த்துகிறார்.

இறை வழிபாட்டில் இசை இணையும் போது அது எல்லோரையும் ஈர்க்கும். இன்னிசைக் கேட்டு இறைவன் உறையும் இடத்திற்கு விருப்போடு செல்லும் எண்ணம் தோன்றும். அதுவே உள்ளத்தை மகிழ்விக்கும் இடமென உணர்த்தும்.

*''வன்னி வாளரவு மத்தமதியமுமாறுஞ் சூடி*
*மின்னியவுருவாஞ் சோதி மெய்ப் பொருட் பயனுமாகிக்*
*கன்னியோர் பாகமாகிக் கருதுவார் கருத்துமாகி*
*இன்னிசை தொண்டர் பாட விருந்த வாப் பாடியாரே''*

# ஆசிரியர்களின் விடுமுறை பற்றிய தகவல்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**பிரசவ லீவு**

2005.02.03 அன்று வெளியிடப்பட்ட 01.2005 இலக்க சுற்றறிக்கையின் படி ஆசிரியைகளுக்கு ஒவ்வொரு குழந்தை பிறப்புக்காக 84 நாட்கள் முழுச் சம்பள லீவும், 81 நாட்கள் அரைச் சம்பள லீவும், 84 நாட்கள் சம்பள மற்ற லீவும், 2005.01.01 தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம். நிரந்தர தற்காலிக அமைய பயிலுநர், உத்தியோகத்தர்களுக்கு இது உரியதாகும்.

பிரசவ லீவு 84 நாட்களை கணக்கிடும் போது அரச லீவு நாட்கள், சனி, ஞாயிறு அகிய தினங்கள் சேர்க்கப்படலாகாது. ஆனால் பாடசாலை தவணை விடுமுறை நாட்கள் இதில் அடங்கமாட்டாது. இந்த விடுமுறை நாட்களில் வேலை நாட்களின் எண்ணிக்கை லீவில் கழிக்கப்படும்.

இதற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் குழந்தையை பராமரித்துக் கொள்வதற்கான அரைச் சம்பளத்துடன் 84 நாட்களைக் கணிக்கும் போது அரச விடுமுறை, சனி, ஞாயிறு நாட்கள் அரைச் சம்பள மற்ற லீவு நாட்களாக கருதப்படும். இதற்குப் பின்னர் பெறப்படும் 84 சம்பள மற்ற லீவு நாட்களையும் கணிக்கும் போது இவ்வாறே கணித்தல் வேண்டும்.

**ஓய்வு விடுமுறை**

பாடசாலை தங்கள் விடுமுறைக் காலங்களிலேயே ஆசிரியர் இவ்விடுமுறைக்கு உரித்துடையவர். குறிப்பிட்ட ஓர் ஆண்டில் ஒரு நாள் வேலை செய்திருப்பினும், பாடசாலை விடுமுறைக் காலம் சம்பளமற்ற விடுமுறைக் குட்படினும் ஆசிரியர் பாடசாலை விடுமுறைக் காலத்துக்கு முழுச் சம்பளத்துக்கும் உரித்துடையவர் ஆவார்.

**விசேட விடுமுறை**

சில நோய்களுக்காக விசேட லீவு அனுமதியளிக்கப்படுவதுண்டு. அதன்படி கயரோகத்திற்காக முழுச் சம்பளத்துடன் 9 மாதங்கள் 2 வெவ்வேறு காலங்களில் இந்த விடுமுறையைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதல் முறை லீவு எடுத்தபின் 1 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே மறுமுறை லீவைப் பெறலாம்.

"குஷ்டரோகத்திற்காக முழுச் சேவைக் காலத்திலும் ஒருமுறை மட்டுமே முழுச் சம்பளத்துடன் 22 மாதங்கள் லீவைப் பெறலாம். புற்று நோய்க்காக 6 மாதம் முழுச் சம்பளத்துடன் விடுமுறையை பெற்றுக் கொள்ளலாம். மேற்சொல்லப்பட்ட விடுமுறைகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறிப்பிட்ட நோய்க்கான வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வயிற்றோட்டம், மகாமாரி, தைபோய்ட், மஞ்சள் காய்ச்சல், போன்ற மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டிய நோய்களுக்காக சம்பளத்துடன் கூடிய விசேட விடுமுறையை பெற்றுக்கொள்ள முடியும். அரசாங்க சுற்றறிக்கை இலக்கம் 32/93 (1993.12.24 திகதியின்) படி வைத்திய சபையினால் அனுமதிக்கப்படும் எந்த வகை நோய்க்கும் வைத்திய சபையினால் பரிந்துரை செய்யப்படும் சத்திர சிகிச்சையின் பின்னர் பராமரிப்பதற்காக சம்பளத்துடன் கூடிய 6 மாத லீவை பெற்றுக் கொள்ளலாம்.

**விபத்து விடுமுறை**

தாபனக் கோவையின் XII ஆம் பிரிவின் 9 ஆவது உப பிரிவு 1993.09.21 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 22/93 படி திருத்தப்பட்டுள்ளது. இது மீண்டும் 2005.05.04 திகதிய சுற்றறிக்கையின் படி திருத்தப்பட்டு அவசர விபத்து காரணமாக லீவு வழங்கலும், நஷ்ட ஈடு வழங்கலும் பின்வருமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

*கடமையை நிறைவேற்றும் போது,*

கடமை நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்திலும் பொதுவாக கடமை விடயத்திற்குட்பட்ட ஏதாவது செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, கடமையில் ஈடுபட்டிருக்கும் நேரத்தில் உண்டாகும் செயற்பாட்டின் பிரதிபலனாக,

வதிவிடத்திலிருந்து கடமைக்கு செல்லும் போது, கடமை ஸ்தானம் வரை அல்லது கடமை நிலையத்திலிருந்து கடமைக்காக செல்லும் போது அல்லது சேவை நிலையத்திற்கு மீண்டும் வரும் போது உண்டாகும் அவசர விபத்துக்களுக்காக நஷ்ட ஈட்டையும் விடுமுறையையும் பெற்றுக் கொள்ளலாம்.

அவசர விபத்து நடைபெற்றவுடன் காயமடைந்த ஆசிரியரை அதிபர் வைத்திய சிகிச்சைக்கு அனுப்ப வேண்டும். லொக் புத்தகத்தில் இது பற்றி குறிப்பிட வேண்டும். காயத்தின் படியும் வைத்திய சபையின் சிபார்சின் படியும் பின்வருமாறு விடுமுறை அனுமதிக்கப்படும்.

ஒரு வருடத்திற்கு முழுச் சம்பளத்துடன் விடுமுறை அதன் பின்னர் 6 மாத காலத்திற்கு அரைச் சம்பளத்துடன் விடுமுறை.

மேல் I இல் சொல்லப்பட்ட ஒரு வருட லீவிற்கு மேலதிகமாக தமக்குரிய லீவை பெற்றுக் கொள்ள ஆசிரியர்களுக்கு உரிமையுண்டு.

நிரந்தரமான ஊனமுற்றவர்களுக்கு 55 வயது நிறைவு பெறும் வரை அவருக்குரிய சம்பளம் வழங்கப்படும். இது தொடர்பான விபரங்கள் 2008/12/29 திகதிய சுற்றறிக்கையில் உள்ளது.

**கடமை விடுமுறை**

பின்வரும் காரணங்களுக்காக வழங்கப்படலாம்.

1. குற்றவியல் வழக்குகளில் அல்லது அரசாங்க வழக்குகளில் சாட்சி சொல்லுவதற்கு.
2. யூரிசபையிற் கடமையாற்றுவதற்கு.
3. படைப் பயிற்சிக்குச் செல்வதற்கு.
4. முன்னிற்கும் படைக் கடமைக்கு அழைக்கப்பட்டால்.
5. சாரணர் கொண்டாட்டம், விஞ்ஞானச் சங்கக் கூட்டம், திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் என்பவற்றில் பங்கு பற்றுவதற்கு.
6. திணைக்களத்தினால் நடத்தப்படும் புத்தூக்க வகுப்புகளுக்குச் செல்வதற்கு.
7. கயரோக விடுமுறையின் பின் கிளினிக் செல்வதற்கு.
8. கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் பரீட்சை பேற்பார்வையாளராக அல்லது நோக்குநராகக் கடமை புரிவதற்கு.
9. கல்வி விடயம் சம்பந்தமாக அமைச்சரால் அல்லது செயலாளரால் அழைக்கப்பட்டால்.
10. தொழிற்சங்கங்களின் வருடாந்தப் பொதுக் கூட்டங்களுக்குச் செல்வதற்கு

**படிப்பு முறை**

ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டால் மட்டுமே ஓர் ஆசிரியர் இவ்விடுமுறைகளுக்கு உரித்துடையவராவார். முழுச் சம்பளத்துடன் 2 வருடங்களுக்கு இவ்விடுமுறை வழங்கப்படும் இப்பயிற்சியை பூர்த்தி செய்த பின் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின்கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

**பல்கலைக்கழகத்திற்கான விடுமுறை**

ஓர் ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட பட்டப் படிப்பு நெறிக்கான பயிற்சிக்கு அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டால், முழுச் சம்பளத்துடன் 2 வருடங்களும், சம்பளமின்றி 1 வருடமும் விடுமுறையாகப் பெறலாம்.

**ஆசான்**

படிப்பை முடித்த பின்னர் குறைந்த பட்சம் 8 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். தற்போது விஞ்ஞான முதுமாணி, கலாநிதி, முகாமைத்துவ மேல் படிப்புக்களுக்கும் போன்றவைகளுக்கும் ஆங்கில உயர் கல்விக்கும் இந்தக் கற்றல் விடுமுறை வழங்கப்படுகின்றது. எந்த லீவாக இருந்தாலும் உரிய அதிகாரியால் அனுமதிக்கப்பட்ட பின்னரே பெற்றுக் கொள்வது பாதுகாப்பானதாகும்.

**கல்விப் பட்டப்பின் படிப்பு விடுமுறை**

இதற்கென தெரிவு செய்யப்பட்டால் முழுச் சம்பளத்துடன் ஒரு வருடம் விடுமுறையாக வழங்கப்படும். குறைந்த பட்சம் 5 வருடங்களுக்கு அரசாங்கத்தின் கீழ் படிப்பு முடித்த பின் சேவை புரிய ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இவைகளைவிட தொலைக்கல்வி உட்பட பல்வேறு பயிற்சிகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஒருநாள், இருநாள் லீவுகள் வழங்கப்படுகின்றன. (தொடரும்)

# ஒஸ்கார் விருது பெற்ற ஏ.ஆர்.ரகுமானுக்கு விளம்பர சம்பளம் ரூ. 10 கோடி



ஒஸ்கார் விருது பெற்றுள்ள ஏ.ஆர்.ரகுமானுக்கு ஹொலிவுட் பட வாய்ப்புகள் மட்டுமல்ல, விளம்பர வாய்ப்புகளும் குவிந்த வண்ணம் உள்ளன.

"ஸ்லம்டாக் மில்லியனர்" என்ற ஹாலிவுட் திரைப்படத்துக்கு இசையமைத்த ஏ.ஆர். ரகுமானுக்கு இரண்டு ஒஸ்கார் விருதுகள் கிடைத்தன. இதனால் இவரது புகழ் உலகம் முழுவதும் பரவி உள்ளது. உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான திரைப்படங்களுக்கு இசையமைப்பதற்கான வாய்ப்புகள் குவிந்து வருகின்றன.

இது மட்டும் அல்லாமல், விளம்பர உலகிலும் இவருக்கான மவுசு அதிகரித்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற நிறுவனமான 'ஆப்பிள்', ரகுமானை விளம்பர மொடலாக நியமிக்க திட்டமிட்டுள்ளது. இதற்கு ரூ.10 கோடி (இந்திய பணம்) ரூபாவை வழங்க முன்வந்துள்ளதாக தெரிகிறது. (ஓ-5)

# விமானத்தில் தாய் பாலூட்டியதால் 4 மாத குழந்தை பரிதாப மரணம்

(மலப்புரம்)

கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள சாலக்குடி என்ற இடத்தைச் சேர்ந்தவர் சீதா சிபு. வளைகுடா நாட்டில் பணிபுரியும் கணவருடன் வசித்து வருகிறார். கர்ப்பமாக இருந்த சீதா, சொந்த ஊருக்கு வந்து குழந்தை பெற்றுக்கொண்டு மீண்டும் வளைகுடாவுக்கு நேற்று முன்தினம் புறப்பட்டார். கோழிக்கோட்டில் இருந்து விமானத்தில் தனது 4 மாதக் குழந்தை பிரித்வின் மற்றும் கணவருடன் இருந்தார்.

விமானம் புறப்படும் சமயத்தில் குழந்தை பிரித்வினுக்கு அவர் பாலூட்டினார். ஓடு பாதையில் விமானத்தில் சென்றபோது, குழந்தையிடம் எந்த அசைவும் இல்லாமல் இருப்பதைப் பார்த்து சீதா கதறி அழுதார். உடனே, அந்த விமானத்திலேயே பயணியாக இருந்த டாக்டர் ஒருவர் குழந்தையை பரிசோதித்தார். குழந்தை மூச்சு விடாமல் இருப்பது தெரிய வந்தது.

உடனே, விமான நிலையத்துக்கு தகவல் கொடுத்து விமானம் புறப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது. குழந்தை பிரித்வினை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோது, குழந்தை இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர். விமானம் புறப்படும் சமயத்தில் பால் கொடுத்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு குழந்தை இறந்து இருக்கலாம் என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஓ-5)

# சட்டத்தரணிகள் நீதிமன்றப் புறக்கணிப்பு; பொதுமக்கள் நேரடியாக வாதாடும் நிலை

## தமிழ்நாட்டில் புதிய கலாசாரம்

(சென்னை)

சட்டத்தரணிகள் நீதிமன்றத்தைப் புறக்கணித்து போராட்டம் நடத்தி வருவதால் பொது மக்களே நீதிமன்றத்தில் நேரடியாக ஆஜராகி உத்தரவு பெறும் புதிய கலாசாரம் தமிழ் நாட்டில் வேகமாகப் பரவி வருகிறது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட திருத்தம், கடந்த மாதம் 19 ஆம்திகதி நடந்த சட்டத்தரணிகள், பொலிஸார் மோதல் ஆகியவை காரணமாக ஜனவரி மூன்றாவது வாரத்தில் இருந்தே உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதி மன்றத்தைப் புறக்கணித்து பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

இதனால் இந்தாண்டு இதுவரை சுமார் 10 நாட்கள் மட்டுமே உயர் நீதிமன்றம் செயல்பட்டுள்ளது. கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர். இதனால் நீதிமன்ற பணிகள் முடங்கியுள்ளன.

இதற்கிடையே, தங்களது வழக்கில் வேகமாக உத்தரவைப் பெற வேண்டிய நிலையில் இருக்கும் பொதுமக்கள் சட்டத்தரணிகளை எதிர்பார்த்து பொறுமை இழந்தனர். இதனால், நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்களில் தாங்களாகவே நேரில் ஆஜராகி வாதாடி இடைக்கால உத்தரவு பெறத் தொடங்கிவிட்டனர்.

**மக்களுக்கு நீதிபதிகள் ஊக்கம்**

சென்னை உயர் நீதிமன்றம், மதுரை உயர் நீதிமன்ற கிளை மட்டுமில்லாமல் தமிழ்நாட்டின் பல நகரங்களில் உள்ள நீதிவான் நீதிமன்றங்களிலும் சின்னச் சின்ன வழக்குகளுக்காக சட்டத்தரணிகள் இல்லாமலே பொதுமக்கள் தாங்களே நேரில் ஆஜராகி இடைக்கால உத்தரவுகளை பெற்றுச் செல்கின்றனர். இவ்வாறு நேரில் ஆஜராகும் பொது மக்களை நீதிபதிகள் ஊக்கப்படுத்துவதாக அரசு சட்டத்தரணிகள் கூறுகின்றனர். தனி மனித சுதந்திரத்தைப் பாதிக்கும் வழக்கு, நிலம் கையகப்படுத்துதல், சொத்துக்களை அழித்தல் போன்ற வழக்குகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சட்டத்தரணிகள் இல்லாவிட்டாலும் தாங்களாகவே நீதிமன்றுக்கு சென்று வாதாடி இடைக்கால உத்தரவுகளைப் பெற முடியும் என்ற உணர்வு பெரும்பாலான மக்களிடம் ஏற்பட்டுள்ளது. இந்தப் புதிய கலாசாரம் தமிழ்நாட்டில் வேகமாகப் பரவி வருகிறது. (ஓ)

# தேர்தல் பிரசார சுவரொட்டிகளில் தமிழர் பிரச்சினை அச்சடிக்கத் தடை

தமிழகத்தில் எதிர்வரும் மே 13ஆம் திகதி நடைபெற உள்ள பாராளுமன்ற தேர்தல் பணியை தேர்தல் கமிஷன் ஆரம்பித்துள்ளது.

தேர்தலை சுமூகமாக நடத்தவும், வாக்காளர்கள் அச்சமின்றி, குழப்பமின்றி வாக்களிக்கவும் தேவையான ஏற்பாடுகளை செய்து வருகிறது. தேர்தல் தொடர்பாக வெளியிடும் அறிவித்தல்கள் சுவரொட்டிகள் தொடர்பாகவும் புதிய விதிமுறைகளை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் தேர்தல் சுவரொட்டிகள் வன்முறை, கலவரங்களை ஏற்படுத்தும் விதமாகவும், ஜாதி மத அமைப்புக்களிடையே உணர்ச்சியை, கிளர்ச்சியை தூண்டும் வகையிலும், சட்ட பிரச்சினைகளை ஏற்படுத்தும் வகையிலும், ஜனநாயகத்துக்கு எதிரான வகையிலும் அச்சடிக்கப்பட கூடாதெனவும் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து எவ்வித வாசகமும் இடம்பெறவே கூடாது. எனவும் தமிழக தேர்தல் கமிஷன் வலியுறுத்தியுள்ளது. (ச-5)

### யாழ்.பாடசாலை அணிகளுக்கிடையிலானஒருநாள் போட்டி தொடர்

# இறுதிப் போட்டியில் வென்று சென்.பற்றிக்ஸ் லெமனற் கிண்ண தொடருக்கு தகுதி பெற்றது

## யாழ்.மத்திய கல்லூரி அணி இறுதிவரை சளைக்காமல் போராடியது

(யாழ்ப்பாணம்)


பந்து வீச்சில் கவாஸ்கரும் துடுப்பாட்டத்தில் மனோஜும் ஜொலிக்க இறுதிப்போட்டியில் யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இவ் வெற்றியின் மூலம் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி கொழும்பில் நடைபெறும் இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான லெமனற் கிண்ண சுற்றுத் தொடரில் யாழ்.மாவட்டப் பாடசாலை அணி சார்பாக கலந்து கொள்ள தகுதி பெற்றது. யாழ்.மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்திய தெரிவு செய்யப்பட்ட 8 பாடசாலை அணிகளுக்கிடையிலான விலகல் முறையிலான மட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று யாழ் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் யாழ்.மத்திய கல்லூரி அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணித்தலைவர் எம் .ஏ.நிலோசன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 46.3 ஓவர் களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 165 ஓட்டங்களை எடுத்தது.



இதில் அணித் தலைவர் கே.செல்ரன் 38 பந்துக்களில் (2பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 32 ஓட்டங்களையும் ஜனோஷன் ஆட்டமிழக்காமல் (ஒரு சிக்ஸர் அடங்கலாக) 25, ரதீஸன் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஏ.கவாஸ்கர் 10 ஓவர்கள் பந்துவீசி 28 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 4விக்கெட்டுக்களையும் எம்.வி.ஹமில்ரன் 9.3 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 31ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் எம்.டிசஜீந்திரன் 2 விக்கெட்டுக்களையும், பி.மைக்கல் ஒருவிக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத் தாடிய யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி மனோஜ்,நவதீபனின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இறுதிவரை போராடி 49.1ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 166 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஏ.எம்.மனோஜ் 57 ஓட்டங்களையும் பி.நவதீபன் ஆட்டமிழக்காமல் 29 பந்துகளில் (3 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எஸ்.மிலான்டோ 34 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்டீபன்ராஜ் 2 விக்கெட்டுக்களையும் கோபிகன், அலன்குமார்,ஜனோஷன் மற்றும் தர்ஷன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் வரும் 19ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான லெமன்ற் கிண்ணத்திற்கான கிரிக்கெட் தொடரில் யாழ்.பாடசாலை அணி சார்பாக கலந்து கொள்ள தகுதி பெற்றுள்ளது. இத்தொடரில் பிரிவு-3இல் இணைக்கப்பட்டுள்ள யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி காலிறுதி ஆட்டத் திற்கு தகுதி பெற்று எதிர்வரும் 16ஆம் திகதி எம்.ஏ.நிலோசன் தலைமை யிலான அணி கொழும்பு செல்வதாக பயிற்றுவிப்பாளர் ஏ.எஸ்.நிஷாந்தன் தெரிவித்தார்

## ஐ.சி.சி.பெண்கள் உலக கிண்ணம்; இந்தியாவிடம் வீழ்ந்தது இலங்கை

சிட்னியில் நேற்று நடந்த பெண்கள் உலகக்கிண்ன கிரிக்கெட் தொடரில் பி பிரிவு ஆட்டத்தில் இந்தியா-இலங்கை அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மிதாலி ராஜ் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 75 ஓட்டங்களைக் குவித்தார். அணித்தலைவர் கோஸ்வாமி 24 ஓட்டங்களை எடுத்தார். 50 ஓவர் முடிவில் இந்தியப் பெண்கள் அணி 7 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்தது.

இலங்கை அணி தரப்பில் பிரபோதனி, குமாரிஹாமி, சிறிவர்த்தன ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

எதிர்த்தாடிய இலங்கை அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. 44.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 102 ஓட்டங்களை மட்டுமே இலங்கை அணியால் எடுக்க முடிந்தது. இதனால் 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றிபெற்றது.

இந்தியாவின் அமிதா சர்மா 3 விக்கெட்டுக்களையும் சுல்தானா, ருமேலிதர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரீமா மல்ஹோத்ரா, பிரியங்காராய் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். ஆட்டநாயகியாக இந்தியாவின் மிதாலி ராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் கிடைத்த 2 புள்ளிகள் மூலம் மொத்தம் 4 புள்ளிகளை பெற்றுள்ள இந்தியா, பி பிரிவில் சூப்பர் சிக்ஸ் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

## தென்னாபிரிக்காவில் சம்பியன்ஸ் தொடர்

(டுபாய்)

மினி உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடப்பது உறுதியாகியுள்ளது.

பாதுகாப்பு பிரச்சினை காரணமாக கடந்த ஆண்டு பாகிஸ்தானில் நடக்கவிருந்த மினி உலகக் கோப்பை தொடர் (சம்பியன்ஸ் தொடர்) ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு டிசம்பரில் பாகிஸ்தானில் நடைபெறுவதாக இருந்தது. இருப்பினும் உலகின் மற்ற அணிகள் அச்சம் தெரிவிக்க இலங்கைக்கு மாற்றப்பட்டது. இத் தொடர் குறித்து முக்கிய முடிவு எடுக்க ஐ.சி.சி. தலைமை நிர்வாக அதிகாரி கள் கூட்டம் நேற்று முன் தினம் நடந்தது.

இக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த இலங்கை கிரிக்கெட் சபை, தொடர் நடக்கவுள்ள டிசம்பர் மாதம் கொழும்பில் மழை பெய்ய அதிக வாய்ப்புள்ளதாக தெரிவித்தது. தவிர பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கவில்லை இதனால் மினி உலகக் கோப்பை இலங்கையிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 24முதல் ஒக்டோபர் 5ஆம் திகதி வரை நடக்கவுள்ள மினி உலகக் கோப்பை தொடரை எங்கு நடத்துவது என்பது பற்றி வரும் திங்கட்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படும்.

## சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... (32)





போட்டி வெற்றியாளர்

இதில் முரளிதரன் 36 ஓவர்கள் பந்துவீசி 15 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 64 ஓட்டங்களைக் கொடுத்து யங் (14), கிரேட்பற்ச் (46),ஸ்டீபன் பிளமிங் (0), தொம்ஸன் (4),பரோர் (17) ஆகிய முன்னணி வீரர்களை வெளியேற்றி 5 விக்கெட்டுக்களை சாய்த்து முதல் முறையாக போட்டி வெற்றியாளர் என கிரிக்கெட் உலகை புகழ வைத்தார்.

அத்துடன் சிறிய பையன்தானே என நினைத்திருந்த கிரிக்கெட் நிபுணர்களை தம்பக்கம் முரளிதரன் ஈர்த்தெடுத்தார். இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் 1995ஆம் ஆண்டு மார்ச் 18ஆம் திகதி டுனேடினில் ஆரம்பமானது.


இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் ருகேர்ளோர்ட் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இல்ங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 233 ஓட் டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் 8 பந்து களில் (ஒரு பவுண்டரி உட்பட) 8 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 307 ஓட்டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் 50 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 77 ஓட்டங்களைக் கொடுத்து பட்டேல் (52), லார்சன் (16) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையுமிழந்து 441 ஓட்டங்களை எடுத்தது. இதில் முரளிதரன் 7 ஓட்டங் களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந் தார். பதிலுக்கு 338 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத் தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி ஒரு பந்து வீச்சை மாத்திரம் எதிர்கொண்ட நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டம் நிறைவடைய இரண்டாவது டெஸ்ட் சம நிலையானது. இதன்மூலம் டெஸ்ட் தொடரை நியூசிலாந்து மண்ணில் இலங்கை அணி கைப்பற்றியது.

பாலா


(பயணிக்கும்)

## எண் விளையாட்டு-37



***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்ளில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சம மாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

நேற்றைய பகுதிக்கான விடை



## ஈழத்...

பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் உள்ள மணலி முனுசாமி நகரில் வசித்து வரும் சுகுமாரின் மகன் செல்வம் (வயது 26) இவர் கீழ்ப்பாக்கத்தில் உள்ள ஒரு கல்வி நிறுவனத்தில் தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு குறித்த பட்டப்படிப்பு பயின்று வருகிறார்.

சென்னையில் உள்ள அரசு தலைமைப் பொது மருத்துவ மனையில் 8 ஆவது மாடியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் செல்வம் ஏறி நின்றார்.

ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க வலியுறுத்தி தற்கொலை செய்ய முயற்சித்த மாணவன் செல்வம் கூறுகையில், மருத்துவமனையின் மாடியில் இருந்து குதித்து தற்கொலை செய்து அரசின் கவனத்தை ஈர்க்க முயற்சித்தேன் என்று கூறினார். (ச-5)

## இந்திய...

தெலுங்கு தேச தலைவர் சந்தரபாபு நாயுடு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் இரு முக்கிய கட்சிகளான அ.தி.மு.க மற்றும் பகுஜன் சமாஜ கட்சியின் தலைவர்களான ஜெயலலிதாவும் மாயாவதியும் இந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. மாறாக அவர்களது பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

தொடக்க உரையாற்றிய பிரகாஷ் காரத், மூன்றாவது அணி உருவாக்கப்பட்டிருப்பதை வரலாறு முக்கியத்துவம் வாய்ந்தது என்று விவரித்தார். காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா கட்சிகளுக்கு மாற்றாக நாட்டில் மாற்று அணி உருவாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்ட நிலையில் தான் மூன்றாவது அணி பிறந்திருக்கிறது என்று அவர் கூறினார். (ச-5)

## வன்னி மக்களை...

ஐரோப்பிய நாடாளுமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் இருந்து வரும் தமிழ் மக்கள் ஒரு சில அகதி முகாம்களிலேயே தங்க வைக்கப்படுவதனால் அகதி முகாம்களில் பெரும் இடப் பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதாபிமான நியமங்களுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் விடுதலைப்புலிகளும் அரச துருப்பினரும் செயற்பட வேண்டியது அவசியம்.

மோதல்கள் இடம் பெறும் பிரதேசங்களுக்கு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சுதந்திர ஊடகவியலாளர்கள் தடையின்றி செல்ல இரு தரப்பினரும் அனுமதிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச சமூகத்தினால் வழங்கப்படவுள்ள உதவிகளுக்கு அரசாங்கம் தடை ஏற்படுத்தக் கூடாது.

தமிழ விடுதலைப்புலிகள் யுத்த வலையத்திலிருந்து சிவிலியன்கள் சுதந்திரமாக இடம் நகர தடை ஏற்படுத்துவதாக ஐரோப்பிய நாடாளுமன்றம் குற்றம் சுமத்தியுள்ளது. (ச-5,14)

## விமான...

பாகங்களை இராணுவத்தின் 58-வது படையணியினர் மீட்டுள்ளனர்.

விமானத்தின் டயர்கள், பற்றரிகள் இயந்திர உதிரிப்பாகங்கள், திசை காட்டும் விளக்குகள் மற்றும் சிறு உபகரணங்கள் என்பன இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் அறிவித்துள்ளது.

# இலங்கையில் மனிதப் பேரழிவு...

இந்த பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்றும், நீண்டகாலமாக காலம் தாழ்த்தப்பட்டுவரும் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கத் தலைமை முயற்சி எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் மோறன் தலைமையிலான இந்த 38 பேர் குழுவில் றொம் லான்டொஸ் மனித உரிமைக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மெக்கவர்ன், அனைத்து மனித உரிமைச் சிக்கல்களையும் எழுப்புவதில் முன்னணியில் இருக்கும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வொல்ஃப், மக்கள் பிரதிநிதிகள் சபையின் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசியா தொடர்பான வெளியுறவுத்துறை துணைக்குழுவில் உறுப்பினராக இருக்கும் குடியரசுக் கட்சியைச்சேர்ந்த டான் போர்ட்டன் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

அந்தக் கூட்டு கடிதத்தில் எழுதியிருப்பதாவது.

### 2 ஆயிரம் பேர் சாவு

இலங்கையின் வட பகுதியில் கொடிய மனிதப் பேரழிவு ஆபத்து ஏற்பட்டிருப்பது குறித்து பெருங் கவலையுடன் இந்த மடலை நாங்கள் எழுதுகிறோம்.

வன்னிப் பகுதியில் சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வரும் சண்டையில் 2 இலட்சம் அப்பாவித் தமிழ் மக்கள் சிக்கியிருப்பதாக மனித உரிமைக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

பெரும்பகுதியினர் வெளியில் இருந்து உணவு, மருந்துகள் கிடைக்காமல் வாரக் கணக்கில் துண்டிக்கப்பட்டுள்ளனர். போரினால் அவர்களின் மனிதத் தேவைகளுக்கும் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் இருந்து 2 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 7ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர் என்றும் மனித உரிமை கண்காணிப்பகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

நிலைமையின் கடுமையைக் கருத்தில் கொண்டு அப்பாவி மக்கள் அனைவருக்கும் முழுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும், மனித நேய உதவிகளை வழங்குவதில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் ஈடுபடுவதற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்றும், தேசிய ஆட்சி நிர்வாகத்தில் அர்த்தமுள்ள வகையில் தமிழர்கள் பங்கேற்பதற்கு வழிகோலும் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதை நோக்கி முன்னேற வேண்டும் என்றும், தமிழர்களுக்கு எதிரான பாகுபாட்டுக்கு முடிவு கட்ட வேண்டும் என்றும் சிறிலங்கா அரச தலைவர் மகிந்த ராஜபக்ஷவை அழைத்து நீங்கள் வலியுறுத்த வேண்டும்.

### இனப்படுகொலை ஆபத்து

இனப்படுகொலை தடுப்புத் திட்ட அமைப்பானது, இனப்படுகொலை ஆபத்து எச்சரிக்கைக்குரிய 8 நாடுகளில் ஒன்றாக இலங்கையைக் கருதுகிறது.

இனப்படுகொலை நிகழ்ந்து கொண்டிருக்கிற அல்லது உடனடியாக நிகழும் ஆபத்து உள்ள நாடுகளை இந்தப் பட்டியல் குறிக்கிறது. இந்தவேளையில் இனப்படுகொலை குறித்த சட்ட விளக்கங்கள் குறித்து சிலர் சர்ச்சை எழுப்பலாம்.

எனினும் இலங்கையில் பரவலாக இன அழிப்பும் வன்முறை நடக்கிறது என்பதிலும் சிறிலங்கா அரசின் கொள்கைகளால் சண்டையில் ஈடுபடாத தமிழ் மக்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்படுகிறார்கள் என்பதிலும் ஐயம் இல்லை.

அப்பாவி மக்களுக்கு எதிரான அனைத்து தாக்குதல்களையும் தொடர்ந்து நீங்கள் கண்டிக்க வேண்டும். சண்டையில் ஈடுபடாத அப்பாவி மக்கள் சுதந்திரமாக வெளியேறி மனிதநேய உதவிகளைப் பெறுவதற்கு இரு தரப்பினரும் மனிதநேய பாதுகாப்புப் பாதைகளை ஏற்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள், உதவிப் பணியாளர்கள், செய்தியாளர்கள், மனித உரிமைக் கண்காணிப்பாளர்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல இசைவளிக்கப்பட வேண்டும். இதற்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படும் என்று நம்புகிறோம்.

### முகாம்களில் மோசமான நிலைமை

மோதல் பகுதியில் இருந்து வெளியேறி வரும் தமிழ் மக்களுக்காக சிறிலங்கா அரசு அமைத்துள்ள பாதுகாப்பு முகாம்களில் உள்ள நிலைமைகளும் எங்களுக்குப் பெரிதும் கவலை அளிக்கின்றன.

வன்முறைக்கு அஞ்சி வெளியேறிவரும் சண்டையில் ஈடுபடாத அப்பாவி மக்களுக்குப் புகலிடம் அளிக்க வேண்டியது முன்னுரிமைக்குரியது என்பது தெளிவானது.

ஆனால் அங்குள்ள அப்பாவி மக்களின் மனிதநேயத் தேவைகளுக்கு இந்த முகாம்கள் போதுமானவையாக இல்லை.

இதேவேளை இலங்கை இனப்பிரச்சினையை ஐக்கியநாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் விவாதிக்க முன்வருமாறு பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்களாக உள்ள நாடுகளை அமெரிக்கா வலியுறுத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாத வரையில் மோதலுக்கு நிலையான முடிபு ஏற்படாது. வரும் மாதங்களில் இலங்கைக்கு அமெரிக்க நிதியுதவியும், அனைத்துலக மறுசீரமைப்பு நிதியுதவியும் வழங்கப்பட இருக்கிறது.

இந்நிலையில் அரசில் தமிழர்களுக்கு அர்த்தமுள்ள பங்கேற்பு அளித்தால்தான் இந்த நிதியுதவி வழங்கப்படும் என்பதை நிபந்தனையாக விதிப்பதற்கு பிற அனைத்துலக நன்கொடையாளர்களுடன் அமெரிக்க நிர்வாகம் இணைந்து செயற்பட வேண்டும் என் ஹிலாரி கிளின்டனுக்கு எழுதியுள்ள அந்த கடிதத்தில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

## இரசாயனத்...

திகதி நடத்திய தேடுதலில் இரசாயனத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் 17 முகமூடிகள் மற்றும் 16 ஆடைகள் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த இரண்டு வருட காலங்களாக புலிகள் இரசாயன வாயுவை படையினருக்கு எதிராக பாவித்துள்ளபோதிலும் படையினர் அந்தச் சவாலுக்கு முகம் கொடுக்கும் முன்னேற்பாடுகளுடன் செயற்பட்டுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. (ச-5)

## புதுக்குடியி...

படையினர் நேற்று இந்த வைத்திய சாலையைக் கைப்பற்றியுள்ளதோடு அப்பிரதேசத்தில் தொடர்ந்தும் முன்னேறி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

புலிகளுக்கு முக்கியமானதாகக் காணப்பட்ட இந்த வைத்தியசாலை கைப்பற்றப்பட்டுள்ளமை படை நடவடிக்கைகளில் ஈட்டப்பட்ட மற்றுமொரு பாரிய வெற்றி என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையப் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்துள்ளார்.

# இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு...

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதன் மூலமாக மட்டுமே இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என இந்திய வெளியுறவுத்துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் வாஷிங்டனில் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து அமெரிக்காவில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் வெளியுறவுத் துறை அதிகாரிகளுடன் கடந்த நான்கு நாட்களாக விவாதித்த பிறகு இந்தக் கருத்தை ஊடகவியலாளர்களிடம் அவர் வெளியிட்டிருக்கிறார்.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, இந்தியா, அமெரிக்கா ஆகிய இரு அரசுகளின் நிலைப்பாடுகளும் ஒன்றாகவே இருக்கிறது.

முதற்கட்டமாக இலங்கையில் போர் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்கள் அங்கிருந்து அமைதியாக வெளியேற இசைவளிக்கப்படவேண்டும்.

இலங்கையின் வடக்குப் பகுதியில் அனைத்தும் முழுமையாக அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தபிறகு அந்தப் பகுதி மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கும் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருவதும் தேவையாகும்.

இந்த இலக்குகளை எட்ட அங்குள்ள தமிழ் மக்களுக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவது முக்கியமாகும்.

தங்களின் அரசியல் எதிர்காலத்தை தாங்களே தீர்மானித்துக் கொள்ளலாம் என்று அங்குள்ள தமிழர்கள் கருதும் நிலை ஏற்படுத்தப்படவேண்டும்.

அப்போதுதான் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். அவ்வாறு செய்யாவிட்டால் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக தமிழ் மக்கள் கருதுவார்கள்.

பாதுகாப்பான இடம்தேடி நகர்வர். அதன் பயனாக மீண்டும் போர் ஏற்படும் என்று சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்றுவரும் போரால் அங்குள்ள மக்களின் மனித நிலை மோசமடைந்திருக்கிறது என்ற கோணத்தில் மட்டுமன்றி போரால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீள் கட்டுமானம் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் தமிழர்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டியது தேவையாகும்.

இது குறித்த இந்தியாவின் கருத்தை அமெரிக்காவும் முழுமையாக ஏற்றுக் கொள்கிறது என்று சிவ்சங்கர் மேனன் குறிப்பிட்டார்.

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக இந்தியா பல்வேறு உதவிகளைச் செய்திருக்கிறது. போரால் காயமடைந்த மக்களுக்கு மருத்துவ சிகிச்சையளிப்பதற்கு 56 பேர் கொண்ட மருத்துவக்குழு இலங்கைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

அந்தக் குழு புல்மோட்டை என்ற இடத்தில் மருத்துவமனை அமைத்து, காயமடைந்த தமிழர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்குவார்கள் என்றும் சிவ்சங்கர் மேனன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பயணத்தை நேற்று வியாழக்கிழமை முடித்துக் கொண்ட சிவ்சங்கர் மேனன் இன்று காலை இந்தியா திரும்புகிறார். (ச-5)


## மரண அறிவித்தல்

### திருமதி வனிதலட்சுமி மகேஸ்வரன்



(மிதிலை அன்ரி -தையல் ரீச்சர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனிதலட்சுமி மகேஸ்வரன் நேற்று 12.03.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரனின் அன்பு மனைவியும் ஜனகேஸ்வரனின் (போதனாசிரியர், ஊடகவளங்கள் பயிற்சி மையம், யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தாயாரும், கிருபாவின் (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) நேசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13.03.2009 வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

'மிதிலை'
324,பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மகன், மருமகள்.

(C-2198)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் போதனாசிரியர்
ம.ஜனகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி வனிதலட்சுமி மகேஸ்வரன்**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகிறோம். அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

-நண்பர்கள்

(இ)

## தொழிற் பயிற்சிகள்

*Mobile phone Repairing
Hard ware Hard ware Repairing
Soft ware Phone Lock காலம்:- 2 மாதம்
*ரேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
Radio, CD player, DVD, Television, AMP, UPS
ஆகியன திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 9 மாதம்
*ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும். காலம்:- 6 மாதம்
பயிற்சி ஆரம்பம்:- 15.03.2009 -16.03.2009

JAFFNA TECHNICAL INSTITUTE
45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:-6434, 0718561654

(C-2195)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.